DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1404 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 3, 2023

# Canadians should be cautious about foreign interference in elections: Security officials say

# கனடிய தேர்தல்களில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு தொடர்பில் கனடியர்கள் கவனத்தோடு இருக்க வேண்டும்

## கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை நிறுவனம் வேண்டுகோள்

Canadian Security Intelligence Service | Service canadien du renseignement de sécurité

கனடாவில் நடைபெறும் மத்திய மற்றும் மாகாண அரசுகளிற்கான தேர்தல்களின் போது வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு உள்ளனவா என்னும் விடயத்தில் கனடியர்கள் மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும் என கனடாவின் அதி உயர் பாதுகாப்பு சேவை நிறுவனமான ((சிஎஸ்ஐஎஸ்) கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவை நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் ஒட்டாவாவில் தேசிய ஊடகங்களின் செய்தியாளர்களுக்கு வழங்கிய கேள்வி பதில் நிகழ்வில் மேற்கண்டவாறு தெரிவித்தார் என அறியப்படுகின்றது.

(உள்ளே தொடர்ச்சி 3ம் பக்கத்தில்)

# 'கனடா உதயன்' பத்திரிகையில் பிரசுரமான கட்டுரையால் உதவி பெற்ற தாயகக் கிராமம் ஒன்று ஒரு நேரடி ரிப்போர்ட்

## யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



எமது கனடா உதயனில் அண்மையில் பிரசுரமான கட்டுரை ஒன்று வறுமை மற்றும் இயற்கை அச்சத்தின் நடுவே வாழ்ந்துவரும் பலருக்கு சில உதவிகளைப் பெற்றுத்தந்துள்ளது.நெடுங்கேணி, ஒலுமடு, காஞ்சுரமோட்டைப் பகுதியில் வசிக்கும் மக்களின் நிலை தொடர்பில் வெளிவந்த செய்தியினையடுத்து புலம்பெயர்ந்து வசிக்கும் உறவுகள் சிலர் உடனடி உதவி புரிந்தனர்.

காஞ்சுரமோட்டை தொடர்பில் முதன் முதலாக 'கனடா உதயனில்' பிரசுரமான செய்தி தொட்பில் ஊடகவியலாளர் சகிதம், நேரில் சென்று காஞ்சுரமோட்டை, ஒலுமடு, வெடிவைத்தகல் கிராமங்களினதும் அவர்களின் அவலங்களையும் நேரில் பார்வையிட்டதன் பின்னர் அங்கே வசிக்கும் குடும்பங்களிற்கு தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியிலான உதவிகள் செய்தியாளர் ஊடாக ஒரு தடவை வழங்கி வைக்கப்பட்டது.

(உள்ளே 13ம் பக்கத்தில் தொடர்ச்சி)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004


Hosted By
FRONTLINE
COMMUNITY CENTRE
HONOURING
OUR
HEROES
A COVID-19
COMMEMORATION
CONCERT & FAIR!
Celebrating our brave frontline workers. Come out to support our local small businesses and artists!
March 25th & 26th, 2023
10 am - 10 pm
MARKHAM FAIRGROUNDS
10801 McCowan Rd, Markham, ON L3P 3J3
JOIN US FOR
MULTICULTURAL LIVE MUSIC AND DANCE SHOW
GUEST SPEAKERS & AWARD CEREMONY
VENDOR AND FOOD BOOTHS
FREE ADMISSION & PARKING
DOOR PRIZES
Funded by the Government of Canada
Canada
FRONTLINE COMMUNITY CENTRE
3031 Markham Rd, Unit 27,
Scarborough, ON M1X 1L9
events@fcccanada.org | www.fcccanada.org | GET IN TOUCH 416-840-4425

# உதயன் கதிரோட்டம்

## சம்பந்தனும் மாவை சேனாதிராஜாவும் அரசியலிலிருந்து ஓய்வு பெற வேண்டும் என்ற குரல் வடக்கில் ஓங்கி ஒலிக்குமா?

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தப்போவதாக ரணில் 'பொய்யான' அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு 'தூங்கிக் கொண்டிருந்த பல அரசியல்வாதிகளை கண் திறந்து வாய் திறந்து ஏதோ எல்லாம் பேசத் தொடங்கியுள்ளார்கள். பொதுவாகவே இலங்கையை வழி நடத்தும் மத்திய அரசு செயலிழந்து போய் தடுமாறுகின்றபோது. உள்ளூராட்சத் தேர்தல்கள் எதைச் சாதித்து விடப்போகின்றன எனற் கேள்விகள் தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் தலைநகரிலும் ஒலிக்கத் தொடங்கியுள்ள இந்த நாட்களில் தமிழர் பகுதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை சாட்டாக வைத்து தங்கள் முகங்களைக் காட்டத் தொடங்கியுள்ளார்கள் பலர்.

சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு அருகில் அமைந்திருக்கும் இளங்கலைஞர் மன்றத்தின் மண்டபத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் தனது உரையில் 'போதைப்பொருள் கலாச்சாரத்தை ஒழிக்க எமது கட்சிக்கு வாக்களியுங்கள் என்று வேண்டுகோள் விடுக்க அதை நகைச்சுவையாகவும் நையாண்டியாகவும் தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் தகவல்களாக தாவித்திரிந்ததை பலர் அறிந்திருந்தார்கள்.

யாழ்ப்பாண குடாநாம்டில் எத்தனையோ வருடங்களாக போதைப்பொருள் வர்த்தகம் வானளவிற்கு உயர்ந்து அங்கு நிம்மதியாக வாழ்ந்து வந்தவர்களை அவலங்களுக்குள்ளாக்கிய சம்பங்களை கண்டும் காணாதவர் போல இருந்து விட்டு தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் போதைப் பொருளை ஒழிப்போம் என்று 'அரசியல்' பேச முற்படுகின்றவர்களை வடக்கு கிழக்கு மக்கள் செவிமடுத்து எவ்விதமான மாற்றங்களையும் கண்டுவிட முடியாது என்பதையே தற்போது யாழ்ப்பாணத்தில் மாற்று அரசியல் கொள்கைகளோடு முன்வந்துள்ள பல இளைஞர்கள் தெரிவித்துள்ளார்கள் என்பது அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகளாக உள்ளன.

இதைப்போன்ற மற்றுமொரு செய்தி வடக்கிலிருந்து தற்போது வெளியாகியுள்ளது. கொழும்பில் வாசம் செய்கின்ற தமிழ் அரசியல் தலைவர் சம்பந்தன் அவர்கள் தொடர்பான செய்தியொன்றை சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்

தனது அலுவலகத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் கீழ் கண்ட வாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்...

"கடந்த சில நாட்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசு கட்சி, அதன் செயற்பாடுகள் தொடர்பான கருத்து வேறுபாடுகள் குறித்து பல செய்திகள் வெளிவந்துள்ளன. அது பற்றி விமர்சனம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால் இருந்தாலும் கூட ரெலோவின் பேச்சாளர் சம்பந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியில் இல்லை. அல்லது அவரது பதவி செயலற்றுப் போய்விட்டது. அவருடைய தலைவர் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

தமிழரசுக் கட்சி கூட்டமைப்பிலிருந்து வெளியேறவில்லை. ஆனால் இரண்டு கட்சிகளாலும் காலம் காலமாக பல காலமாகவே உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு விடயம் – அந்த விடயத்தை அவர்கள் நிறைவேற்றி இருக்கின்றார்கள். அது அவர்களின் உரிமை. பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட மூன்று கட்சி களும் அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து கடந்த 2020 ஆம் ஆண்டு சம்பந்தனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவராக தெரிவு செய்தனர். அது முன்பும் அவ்வாறே நடந்தது. ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் தெரிவு என்பது இதுவரையில் பாராளுமன்றக் குழுவாகவே இருந்திருக்கின்றது.

பாராளுமன்றக் குழு தெரிவு செய்த சம்பந்தன் இன்னும் அந்தப் பதவி-யில் தான் இருக்கின்றார். ஆகவே அவரை நீக்குவதோ அல்லது அந்தப் பதவி வறிதாக்குவதோ வெறுமனே ஓர் ஊடக அறிக்கை மூலம் சொல்ல முடியாது. முறைப்படியாக பாராளுமன்றக் குழு கூடி விரும்பினால் அவரை நீக்கலாம் அல்லது அவர் விரும்பினால் விலகலாமே தவிர பதவி வறிதாக்கல், செயலற்றுப் போதல் என்று எதுவும் இல்லை. நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு தலைவரை இவ்வாறு அவமதிக்கின்ற ஒரு கூற்றை என்னைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சி சார்ந்தது மட்டுமல்லாது பொதுவாகவே ஒரு மனிதனின் மதிப்பு சார்ந்த விடயத்தில் அதை ஆட்சேபிக்கின்றேன். அது தவறு. சம்பந்தன் இன்னும் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் கூட்டமைப்பின் தலைவராகவும் செயற்படுகின்றார் என்பதே உண்மை" என்றார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்ற அமைப்பு பலமிழந்து போய்உள்ள நிலையில் அரசியலில் ஓய்வு பெற வேண்டியவர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சம்பந்தன் ஆகிய இந்த இருவர் மீது உள்ள நம்பிக்கைகள் கீழே 'இறங்கிச்' செல்லுகின்ற நிலையில் தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் தகுந்த முடிவுகளை எடுக்கவும் தகுந்த அரசியல் வழிகாட்டிகளை தேடவும் முயல வேண்டும் என்ற கோரிக்கையை இவ்வாரக் கதிரோட்டம் மூலம் விடுக்கின்றோம்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## (முன்பக்கத் தொடர்ச்சி) கனடிய தேர்தல்களில் வெளிநாட்டுச் சக்திகளின் தலையீடு தொடர்பில் கனடியர்கள் கவனத்தோடு இருக்க வேண்டும்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் " இந்த விடயம் தொடர்பாக எவர் மீதும் இதுவரை குற்றவியல் சார்ந்த குற்றச்சாட்டுகள் எதுவும் சுமத்தப்படவில்லை எனவும் கனடாவில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களின் அதிகாரிகள் எவரும் வெளியேற்றப்படவில்லை. எனவும் பொது எச்சரிக்கை எதுவும் எந்த சந்தர்ப்பத்திலும் வெளியிடப்படவில்லை. வெளியிடப்படவில்லை என்றும் தெரிவித்த அவர் எனினும் கனடியர்கள் இந்த விடயம் தொடர்பாக கவனத்தோடும் அக்கறையோடும் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கனடாவின் 2019 மற்றும் 2021 தேர்தல்களில் தலையிட சீன அரசாங்கம் முயன்றதாகவும் இந்த முயற்சிகள் பற்றிய குற்றச்சாட்டுகளை விவரிக்கும் சமீபத்திய ஊடக அறிக்கைகள் பல வெளியானபோதும் மேலும் நடவடிக்கை எடுக்கக்கோரும் வகையில் தமக்கு அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லை என்றும் என்பதை பாதுகாப்பு அதிகாரிகளின் உயர் மட்டக்குழு கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று வியாழக்கிழமை ஒட்டாவா மாநகரில் தெளிவுபடுத்தியது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மூன்று மணிநேர சந்திப்பின் போது, கனடாவின் தேர்தல் கண்காணிப்பு குழு, கனடிய பாதுகாப்பு புலனாய்வு சேவையின் (சிஎஸ்ஐஎஸ்), மூத்த அதிகாரிகள் மற்றும் சிரேஸ்ட சுஊஆீ அதிகாரி மற்றும் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள இரண்டு மூத்த அரசு ஊழியர்கள் அனைவரும் சீன அரசின் தலையீடு களின் நோக்கம் குறித்து இப்போது பரவி வரும் உரையாடல்கள் அல்லது செய்திகள் தொடர்பாக எடுத்துரைத்தனர் என அறியப்படுகின்றது

இந்த விடயம் தொடர்பாக கனடிய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் டேவிட் மோரிசன் அவர்கள் தெரிவிக்கையில் , " தேர்தல் காலத்தில் அவற்றுள் ஊடுறுவல் செய்யும் வெளிநாட்டு சக்திகளின் தலையீட்டை கண்காணிக்கும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் இருப்பினும், கடந்த இரண்டு நாட்கள் விசாரணைகள் நடந்த போதிலும், இந்த விவகாரத்தில் தற்போது பொது விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியப்படுகின்றது

2019 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரங்களில் சீனாவின் குறிப்பிட்ட அளவு செல்வாக்கு செலுத்த முயன்றதாக குலோப் அண்ட் மெயில் மற்றும் குளோபல் நியூஸ் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டதை த் தொடர்ந்து, , குறிப்பிட்ட சில வேட்பாளர்களை பரிந்துரைக்கும் அல்லத அந்த வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையில் பணம் மற்றும் பரிசுப் பொருட்டகள் மற்றுமு் நன்கொடைகள். ஆகியவை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தன என்றும் தெரிவித்தார்.

இந்த விடயங்களை ஊளுஐளு இன் உளவுத்துறை அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கைகளும் மேற்கோள் காட்டின என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**Handyman Wanted**

Handyman with experience needed for Renovation company in Toronto.
Salary negotiable.

Contact: Thambi
OODAM MAINTENANCE WORK

Call:
(416) 464-1938

**Rich Cakes by Araviram**

றிச் கேக் ஆர்டர் செய்ய விரும்பீர்களா?

**Spoil your guests with our delicious Sri Lankan Rich Cakes, they make the perfect treat for any event!**
**Contact:**
**Raguram - 647 648 1154**

**BASEMENT FOR RENT**

Mclevin & Sewells
சந்திப்பிற்கு அருகில்
basement with separate entrance,
laundry & wifi வாடகைக்கு உண்டு.
Close to TTC & shops.

Call:
(416) 809-2280

**CLEANING STAFF WANTED**

House Cleaning Staff Wanted

Day Shift Only.
(No Evenings Or Weekends)

Call:
(905) 4726042

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காற்றாலை செயற்திட்டத்தினால் நாங்கள் மன்னார் மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும்

## அதற்கு அனுமதி வழங்கப்பட்டதற்கு எதிராக மன்னார் பிரஜைகள் குழு ஊடக சந்திப்பு

மன்னார் மாவட்டத்தில் அதானி நிறுவனத்திற்கு காற்றாலை செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிராகவும் அதே நேரம் காற்றாலை அமைக்கும் போதோ விரிவுபடுத்தலின் போது மன்னார் தீவு மக்களின் ஆலோசனையோ கருத்துக்களையோ அரசாங்கம் உள்வாங்கவில்லை எனவும் இந்த திட்டம் மன்னார் மாவட்டத்தில் சர்வாதிகாரமான முறையில் பலவந்தமாக மேற்கொள்ளப்படுவதாகவும் மன்னார் பிரஜைகள் குழு குற்றம் சுமத்தியுள்ளது.

வெள்ளிக்கிழமை (24) மன்னார் பிரஜைகள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின் போது பிரஜைகள் குழுவினரால் குறித்த குற்றசாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடக சந்திப்பின் போது மேலும் கருத்து தெரிவிக்கையில்.

நாங்கள் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் அங்கத்தவராக உறுப்பினராக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம் இன்று நாங்கள் இந்த இடத்திலே ஒன்று கூடி இருப்பதன் முக்கியமான நோக்கம் மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு பகுதியில் ஏற்கனவே அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டிருக்கின்ற காற்றாலை மின் உற்பத்தி திட்டம் தற்பொழுது விரிவுபடுத்துவதற்காக இந்தியாவினுடைய தனியார் நிறுவனமான அதானி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் மன்னார் தீவு பகுதியில் அமைக்கப்பட்டது போன்று இது மிகப்பெரியதொரு காற்றாலை மின் திட்டத்தை அமைப்பதற்காக அரசாங்கத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கின்றது என்ற செய்தி எங்களுக்கு ஒரு பேரிடியாக கிடைத்திருக்கின்றது.

இந்த விடயத்தை அடிப்படையாக கொண்டே இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கின்றோம் எமது மன்னார் மாவட்டத்து மக்கள் இந்த காற்றாலை பிரச்சினையின் காரணமாக ஏற்கனவே பல்வேறு போராட்டங்களை அமைதி வழியிலே சாத்வீகமான முறையிலே நடத்தி இந்த நாட்டு அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் தங்களுடைய ஆதங்கங்களை தெளிவுபடுத்தி இருக்கின்றார்கள்.

இந்த காற்றாலை மின் பூங்கா திட்டத்தின் மூலமாக மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் அனைத்தையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தும் கூட அவற்றை எல்லாம் கருத்தில் எடுக்காமல் மக்களுடைய வேண்டுகோளை புறந்தள்ளி திரும்பவும் தெற்கு பகுதியில் முடித்து வடபகுதியில் உள்ள கடற்கரை பகுதியிலே இந்த திட்டத்தை நிறைவேற்ற முயற்சிக்கின்றார்கள்.

இந்த விஷயத்தை மக்கள் சார்பாக நாங்கள் கவலையுடனும் ஆதங்கத்துடன் திரும்பவும் எங்களுடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

ஏற்கனவே தலைமன்னார் தொடக்கம் தாழ்வுபாடு வரை கிட்டத்தட்ட 36 காற்றாலை மின்கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது அந்த குறிப்பிட்ட பகுதிக்குள் தலைமன்னார், நடுக்குடா, பேசாலை, பெரியகரிசல், புதுகுடியிருப்பு, சின்னகரிசல், தோட்டவெளி, தாழ்வுபாடு, கீரி போன்ற கிராமங்கள் இந்த காற்றாலை மின் திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டிருக்கிறது.

இப் பகுதி மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் என்பது மீன்பிடி, சிறு விவசாயம், அதே போல் அந்த பகுதியில் இருக்கின்ற பனை, தென்னை வளங்களை பயன்படுத்தி தங்களுடைய வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட இந்த திட்டத்தின் ஊடாக மீனவர்கள் மீன்பிடியிலே கடும் வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றனர். ஏற்கனவே இந்திய மீனவர்வருகையினால் பாதிக்கப்பட்டிருக்கும் எங்கள் மக்கள் இந்தக் காற்றாலை அமைப்பின் மூலமாக பாரம்பரிய கரவலை தொழில் மற்றும் கரையோர மீன்பிடி தொழிலை செய்கின்ற மீனவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு அந்த தொழிலை கைவிடக் கூடிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

தற்போது மண்ணெண்ணெய் உட்பட்ட எரிபொருள் என்பவற்றை மிக உயர்ந்த விலையிலேயே மீனவர்கள் கொள்வனவு செய்து அவர்கள் கஷ்டப்பட்டு கடலுக்குள் சென்று வெறும் வலையுடன் மீன்பிடி இன்றி வீடு திரும்புகின்ற ஒரு துர்பாக்கியமான நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.




எனவே தான் நாங்கள் இந்த விஷயத்தை அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் கவனத்திற்கு பல தடவைகள் கொண்டு வந்திருக்கிறோம்.

வீதிகளில் போராட்டங்களை மேற்கொண்டு மன்னார் மக்கள் தங்களுடைய அவல நிலையை பல முறை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள் என்றாலும் கூட இவை எவற்றையும் கவனத்தில் எடுக்காமல் திரும்பவும் இப்படியான ஒரு செயல் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது என்பதை நினைக்கின்ற போது எமக்கு மிகவும் மனவேதனையாக இருக்கின்றது.

நமது மன்னர் மாவட்டத்தில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் மன்னர் தீவுப் பகுதிக்குள் தான் வாழ்ந்து வருகின்றார்கள் நகரமும் தீவுப்பகுதிகுள் தான் அமைந்திருக்கின்றது.

எனவே இத்திட்டத்திற்காக பெருமளவு காணிகள் தனியாரிடம் இருந்து அதிகமான விலை கொடுத்து வாங்கப்பட்டதன் காரணமாக தற்போதும், எதிர்காலத்திலும் இந்த மக்கள் விவசாயத்தை, கடல்தொழிலை அதேபோன்று பனை தென்னை வளங்களினால் தங்களுடைய ஜீவனோபாயத்தை நடத்திக் கொண்டிருக்கும் பலர் அனைத்தையும் பெரும்பாலும் இழந்து ஒரு வறுமை நிலைக்குள் தள்ளப்படவேண்டிய நிலை ஏற்படும்.

இதனால் நகரத்தில் இருக்கின்ற வியாபாரிகளின் வியாபாரங்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறது இப்படியான துன்ப நிலையில் தான் நாங்கள் மன்றாட்டமாக இந்த அரசாங்கத்திடம் இவ் செயற்திட்டத்தை வேறு பயன்பாடு இல்லாத இடங்களுக்கு மாற்றுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏற்கனவே வடபகுதியில் ஒரு நாளைக்கு ஆயிரம் தொடக்கம் இராண்டாயிரம் வரி இந்திய இழுவை படகுகள் மீன்வளத்தை அழித்துக் கொண்டு செல்கிறார்கள்.

இது ஒரு புறம் இருக்க இந்த காற்றாலைகளும் கடற்கரையோரங்களில் அமைக்கும் போது கரையிலே மீன்கள் வருகின்ற நிலைமை குறைவடைகின்றது இதனால் கரையோர மீனவர்கள் இன்னும் பாதிக்கப்படுகின்றார்கள் இன்னும் சில காலங்களில் இந்தத் தீவை விட்டு வெளியேற வேண்டிய துன்பமான நிலைக்கும் தள்ளப்படுவார்கள்.

இந்த ஆபத்தை உணர்ந்தவர்களாக மிகவும் வினையமாக இந்த நாட்டு ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் இந்திய தனியார் நிறுவனமான அதானி நிறுவனத்திடமும் வேண்டி கொள்வது நாங்கள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல எங்களுக்கும் அபிவிருத்தி திட்டங்கள் தேவை ஆனாலும் மக்களுடைய வாழ்வாதாரத்தை வாழ்விடங்களை அழித்து ஏற்படுத்தும் அபிவிருத்தியாக வேண்டாம் அப்பிடியான அபிவிருத்தியை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

எனவே மன்னார் மாவட்டத்தில் பாவிக்கப்படாத எத்தனையோ ஏக்கர் காணிகள் உள்ளது மன்னார் மாவட்டத்தில் இருக்கும் அவ்வாறான காணிகளை இனம் கண்டு அந்த இடங்களின் இந்த திட்டத்தை மாற்றி இந்த மன்னார் தீவில் நாங்கள் வாழ்வதற்கான உரிமையை தந்துவமாறு கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**



# வடமாகாணத்தின் 18 மனித நேய ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு

வடமாகாணத்தில் மக்களுக்கான மனித நேய பணியாற்றி வருகின்ற மனிதநேய ஊடகவியலாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் வெள்ளிக்கிழமை (24) மாலை இடம் பெற்றது.

அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பினால் ஏற்ப்பாடு செய்யப்பட்ட இந்த கௌரவிப்பு நிகழ்வில் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மனித நேயத்தோடும் அர்ப்பணிப்போடும் தமது கடமைகளை வகைப்பொறுப்போடு முன்னெடுத்து வரும் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 18 ஊடகவியலாளர்களே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்டத்தின் ஊடகவியலாளர் பாலநாதன் சதீசன், முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன், கிளிநொச்சி மாவட்டத்தின் ஊடகவியலாளர் கதிரவேலு இரவீந்திரராசா, மன்னார் மாவட்டத்தின் ஊடகவியலாளர்களான றொசேரியன் லெம்பேட் மற்றும் யூட் பெலிஸ்டஸ் பச்சேக், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஊடகவியலாளர்களான தம்பித்துரை பிரதீபன், முருகப் பெருமான் மதிவாணன், விஜயகுமார் லோஜன், இளயகுட்டி சாரங்கன், நடராசா குகராஜ், தங்கவேல் சுமன், கந்தசாமி பரதன், சுமித்தி தங்கராசா, சோபிகா பொன்ராஜ், தங்கராசா காண்டீபன், இந்ரபாலா வினோஜித், குமாரசாமி செல்வக்குமார், சிங்காரவேலு நிதர்சனம், ஆகியோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

**- மன்னார் நிருபர்**





# "வாழும் போதே வாழ்த்துவோம்"

## மன்னாரில் இடம் பெற்ற உலகத் தமிழர் விருது வழங்கும் விழா

"வாழும் போதே வாழ்த்துவோம்" தேசிய ரீதியில் 25 மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கும் கலாச்சாரத்தை மேம்படுத்த உழைத்தவர்களுக்குமான நான்காவது தேசிய கலா விபூஷணம் "உலகத் தமிழர் விருது வழங்கும் விழா" சனிக்கிழமை (25) மன்னார் பிரதேச செயலகப் பிரிவு பேசாலை சங்கவி பட மாளிகையில் காலை 11 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெற்றது.

இதில் 25 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்த உழைத்தவர்கள் 180 கலைத்துறை சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேவேளை சிறப்பான முறையில் கலையை முன்னெடுத்துச் செல்லும் நபர்களுக்கும் நடிகர்கள் மற்றும் பாடல் கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த கலைஞர்களுக்கும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த விழாவை கலாநிதி துரைராசா சுரேஷ் சங்கவி பிலிம்ஸ் சங்கவி தியேட்டர் உரிமையாளர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக புனித வெற்றி நாயகி ஆலயம் பேசாலை பங்குத் தந்தையும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவருமான வணக்கத்திற்குரிய ஏ ஞானப்பிரகாசம் அடிகளார், புரவலர் ஹாசிம் உமர்,உட்பட மதத் தலைவர்கள் கலந்து கொண்டு விருதுகளையும் கௌரவத்தையும் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் கலைஞர்கள், கலாச்சாரத்தை மேம்படுத்த உழைத்தவர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வில் தமிழர் பாரம்பரிய நாட்டியம் மற்றும் நாட்டுக்கூத்து சிறப்பு நிகழ்வுகளாக இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

**(25.02.2023)**




# நிலாவரையில் இராணுவத்தினரால் வைக்கப்பட்ட புத்தர் சிலை எதிர்ப்பினை அடுத்து அகற்றப்பட்டது

இலங்கை செய்திகள் Sri Lanka News

இராணுவத்தினரால் இரவோடு இரவாக அமைக்கப்பட்ட பௌத்த வழிபாட்டு இடமும் புத்தர் சிலையும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்டவர்களின் தலையீட்டினை அடுதது உடனடியாக அகற்றப்பட்டுள்ளது.

நிலாவரை ஆழமற்ற கிணற்றுப் பகுதியில் இரவோடு இரவாக புத்தர் சிலையும் பலகையிலான அமைக்கப்பட்ட சிறு அறை வடிவிலான கட்டுமானமும் கொங்கிறீட் இடப்பட்டு நாட்டப்பட்டுள்ளது. இதனை கண்ணுற்ற மக்கள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு இரகசியமாக தகவல் அளித்துள்ளனர். இதனையடுத்து அவ்விடத்திற்கு தவிசாளர் மற்றும் உப தவிசாளர் உள்ளிட்டவர்கள் சென்றுள்ளனர்.

இராணுவச் சிப்பாய் ஒருவர் பலகையினால் அரச மரத்தின் கீழ் நடப்பட்டிருந்த வழிபாட்டு இத்தில் இருந்து புத்தரை எடுத்துச் சென்றுவிட்டார். தொடர்ந்து தவிசாளர் உடனடியாக அவ் வழிபாட்டு இடத்தினை அகற்றுமாறும் நீதிமன்றத்தில் ஏற்கனவே இது தொடர்பான வழக்குகள் உள்ளன நிலையில் யார் இவ்வாறு செயற்பட்டது கேட்க, அவ்விடத்தில் சீருடையில் நின்றிருந்த இராணுவ சிப்பாய்கள் தொலைபேசியில் எவருடனோ உரையாடிவிட்டு குறித்த பலகையிலான கட்டுமானத்தினை அடியோடு அகற்றி அருகில் இருந்த இராணுவ முகாமிற்கு எடுத்துச் சென்றனர்.

இந் நிலையில் அச்சுவேலி பொலிசார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து தவிசாளரிடம் பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்தனர். பொலிசாரின் வருகையுடன் அயல் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியும் வருகை தர தவிசாளர் தமிழ் மக்களின் பிரதேசத்தில் அவர்களது பிரதேசத்தினை இராணுவ அனுசரனையில் பௌத்த மயமாக்க மேற்கொள்ளப்படுவதை கண்டித்ததுடன் பற்றியும் இனி இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது எனவும் விசனத்தினைத் தெரிவித்தபோது, இராணுவப் பொறுப்பதிகாரி இங்கு காவல் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் இவ்வாறு நடந்து கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் குறித்த இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்களும் நேரில் நிலைமைகளை ஆராய்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இவ் வளாகத்தில் இராணுவத்தினரும் தொல்லியல் திணைக்களமும் ஏற்கனவே இரண்டு தடவைகள் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிலத்தில் அத்திபாரம் போன்று வெட்டிய நிலையில் அதனைத் தடுத்தமைக்காக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு எதிராக அரச கருமத்திற்கு தடை ஏற்படுத்தியதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கில் சட்ட மா அதிபரின் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலய மாணவர்களுக்கு புத்தகப்பை பாதணிகள்

**- ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

முல்லைத்தீவு / உடையார் கட்டு மகா வித்தியாலயத்தில் 157 மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் பாதணிகள் வழங்கும் நிகழ்வானது 26-02-2023 அன்று பாடசாலையின் அதிபர் திரு. விநாசித்தம்பி ஸ்ரீதரன் தலைமையின் காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயம், முல்லைத்தீவு / உடையார் அரசினர் தமிழ் கழவன் பாடசாலை, முல்லைத்தீவு / மூங்கிலாறு ஆரம்ப பாடசாலை, முல்லைத்தீவு / குரவில் தமிழ் வித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலையில் இருந்து 157 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இன் நிகழ்வில் முல்லைத்தீவு பிரதேச கோட்டக் கல்வி அதிகாரி, பாடசாலையின் அதிபர்களாகிய திருமதி. செல்வரஞ்சனி, பொன்னம்பலம், திரு. தெய்வேந்திரன் மங்கள லேஸ்வரன், இருட்டுமடு வித்தியாலய அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




மேலும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களான லோ. கஜரூபன், எஸ்.காந்தன், சி. துலக்சன், மா. ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான புத்தகப்பை மற்றும் பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் மாணவர்களுக்கு 400,000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைத்தமை குறிப்பிடதக்கது.


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicCanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHT BROKER = RIGHT MORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# நீர்கொழும்பு கல்வி வலையத்தில் கறுப்பு உடையில் கடமைக்கு சமூகமளித்து கற்பித்த ஆசிரியர்கள்



அரசாங்கத்தின் வரிக் கொள்கை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியில் புதன்கிழதை (01) பணிப் புறக்கணிப்பு, சுகயீன விடுமுறை, எதிர்ப்பு பேரணிகள் மற்றும் கறுப்பு உடையணிந்து கடமைக்கு சமூகமளித்தல் தங்களுடைய எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.



இதேவேளை, ஆசிரியர்கள், அதிபர்கள் கறுப்பு உடை அணிந்தும் மற்றும் கறுப்பு பட்டி அணிந்தும் பெரும்பாலான பாடசாலைகளுக்கு சமூகமளித்துள்ளனர்.

சம்பள அதிகரிப்பின் இரண்டாம் கட்டம் இந்த வருடம் வழங்கப்படாமை, நிலுவை சம்பளத்துக்கு வரி அறவிடல் உட்பட பல்வேறு காரணங்களை முன்வைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் இந்த கறுப்பு வார போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நீர்கொழும்பு கல்வி வலையத்தில் கட்டானை கல்விக் கோட்டத்தில் பாடசாலை ஒன்றின் அதிபர், ஆசிரியர்கள் கறுப்பு ஆடை அணிந்து கடமைக்கு சமூகமளித்தனர். எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் பாடசாலை வாயிலில் கறுப்பு கொடி பறக்கவிடப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்றது.

# இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொருந்தும்: நீதிமன்றம் உத்தரவு




தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) விதிகள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் செவ்வாய்கிழமை (28) தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி அறிவிக்க வேண்டும்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சம்பத் அபயகோன் மற்றும் பி. குமார ரத்தினம் ஆகிய இரு நீதியரசர்கள் அடங்கிய அமர்வே இந்த தீர்ப்பை அறிவித்துள்ளது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிவிப்புச் சட்டத்தின் விதிகளுக்கு மேல் தகவலறியும் உரிமைச் சட்டம் மேலோங்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதன் மூலம் மக்கள் தங்கள் சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிவிப்பின் ஊடுக பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அறிய முடியும்.

“பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களால் பராமரிக்கப்படும் நபர்கள். அவர்கள் எல்லா நேரங்களிலும் நாட்டின் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, மற்றவர்கள் பின்பற்றுவதற்கு முன்மாதிரிகளை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின் விதிகளின் கீழ், சட்டத்தின் விதிகளின் கீழ் வரும் எந்தவொரு நபரும், தேவையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் தொடர்புடைய அறிவிப்பை வழங்கத் தவறினால், அபராதம் அல்லது விளக்கத்துடன் கூடிய சிறைத்தண்டனையுடன் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்தவர்அல்லது அபராதம் மற்றும் சிறைத்தண்டனை இரண்டும் விதிக்கப்படும்” என நீதியரசர் அபேகோன் குறிப்பிட்டார்.

தனது சொத்துப் பத்திரங்களை ஒப்படைத்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களை தமக்கு வெளியிட வேண்டும் என தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி பாராளுமன்ற செயலாளர் நாயகம் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளருக்கு 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எழுதிய கடிதத்தில், 2018 ஆம் ஆண்டில் அந்தந்த சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கைகளை ஒப்படைத்த எம்.பி.க்களின் பெயர் பட்டியலை பாராளுமன்றத்தின் தகவல் அதிகாரியிடம் ஊடகவியலாளர் சாமர சம்பத் கோரியிருந்தார்.

எவ்வாறாயினும், ஓகஸ்ட் 2018 இல் ஒரு கடிதத்தில் தகவல் அதிகாரி, 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின்படி பாராளுமன்ற சபாநாயகருக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் கோரிக்கையை நிராகரித்திருந்தார். பாராளுமன்ற உறுப்பினர்களின் அறிவிப்புகளை நிர்வகிக்கும் ஒரு தனி சட்டம் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டிருந்தார்.

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டது, அங்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய அறிவிப்புச் சட்டம் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பொருந்தும் என்று அறிவித்துள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் இலக்கு கிராம மக்களுக்கும், இயற்கை வள திணைக்களங்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் விசேட கலந்துரையாடல்

இலக்கு கிராம மக்களுக்கும், இயற்கை வள திணைக்களங்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தும் நோக்குடன் பொது கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (28) காலை மன்னார் வாழ்வோதயம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் மன்னார் வாழ்வோதயத்தின் ஏற்பாட்டில், நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எஸ்.ஜேசுதாசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது இலக்கு கிராமங்களான மடு றோட், சௌத்பார், கீரி, வேப்பங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை, சுற்றுச்சூழல் அதிகார சபை, வனவிலங்கு திணைக்களம், காட்டு இலாகா ஆகியவற்றின் அதிகாரிகள், கிராமங்களின் சூழல் பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திணைக்களங்களின் அதிகாரிகள் தமது சேவைகள் பற்றியும், சந்திக்கும் சூழல் பாதுகாப்பு சவால்கள் பற்றியும் விளக்கமளித்தனர்.



மேலதிக விளக்கங்களை மக்கள் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

திணைக்கள அதிகாரிகளும், மக்களும் இந்த உறவுப்பால ஏற்பாட்டிற்காக கறிராஸ் வாழ்வுதயத்திற்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



மக்களை நேரடியாக சந்திக்கவும், கலந்துரையாடல்கள் ஊடாக அவர்களுக்கு தெளிவூட்டல் களை வழங்கவும், அவர்களுடன் நெருங்கி அறிமுகத்தினை ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டது.

இதன் போது கலந்து கொண்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில், வனவிலங்கு திணைக்களம், சுற்றுச்சூழல் அதிகார சபை என்பவற்றின் அதிகாரிகளை நேரடியாகச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்ததுடன், அவர்கள் மூலம் அந்தத் திணைக்களங்களின் சேவைகள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக் கொண்டோம்.

உருவாகியுள்ள தொடர்பினையும், உறவினையும் கொண்டு நமது சூழலை தாமே பாதுகாத்துக் கொள்ளும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்கள்.

**- மன்னார் நிருபர்**



# மன்னாரில் பாரம்பரிய நெல் இன அறுவடை முன்னெடுப்பு

அழிந்து வரும் பாரம்பரிய நெல் இனங்களை பாதுகாக்கும் முகமாக மன்னார் மெசிடோ நிறுவனத்தினால் கடந்த வருட இறுதியில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு தொகை பாரம்பரிய நெல் விதைகள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நெற் செய்கையின் அறுவடை புதன்கிழமை காத்தான் குளம் பகுதியில் மெசிடோ நிறுவன ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது.

“நஞ்சற்ற உணவு உற்பத்தியை” ஊக்குவிக்கும் முகமாக முற்றிலும் இயற்கை பசளைகள் பயன்படுத்தி இயற்கையான முறையில் பயிர் செய்யப்பட்ட “சுவடை” என அழைக்கப்படும் பாரம்பரிய மூன்று மாத கால நெல் காத்தான்குளம் விவசாயிகளால் விதைப்பு செய்யப்பட்டிருந்த நிலையில் மேற்படி அறுவடை இன்றைய தினம் பாரம்பரிய முறையில் இடம் பெற்றது.

எந்த ஒரு இயந்திர சாதனங்களையும் பயன்படுத்தாது பாரம்பரிய முறையில் விதைப்பு மேற்கொண்டு அருவி வெட்டி சூடு மிதித்து அனைத்தும் இயற்கையான பாரம்பரிய முறைப்படி இடம் பெற்றது.

ஏனைய செய்கைகளை விட சுவடை இன நெல் மூன்று மாத காலப்பகுதிக்குள் அறுவடைக்கு தயாராகும் என்பதுடன் தற்போது மூடை பத்தாயிரம் ரூபாய்க்கு (10.000) அதிகமான விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

மெசிடோ நிறுவனமானது கடந்த மூன்று வருடங்களாக இவ்வாறு பாரம்பரிய நெல் இனங்களை பாதுகாக்கும் முகமாகவும் நஞ்சற்ற விவசாய செய்யையை ஊக்குவிக்கும் முகமாக தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு சீணட்டி, மொட்டைகறுப்பன், சுவடை, பச்சைபாளை போன்ற நெல் இனங்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**




THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

## சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கூட்டாக கோரிக்கை



மன்னார் மாவட்டம் உட்பட வட மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரசு மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாறாக மீனவர்களின் வாழ் வியலை சீர் குலைக்கும் நிலைக்கு இட்டுச் செல்ல கூடாது என மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டம் உட்பட வட மாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து திங்கட்கிழமை (27) காலை 11 மணியளவில் மன்னாரில் ஊடக சந்திப்பு ஒன்றை மேற் கொண்டனர்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, மன்னார் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் இணைப்பாளர் தயாளன், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஏ.பெனடிற் குரூஸ், மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம். ஆலம் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்.

இதன் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், மன்னார் மாவட்ட மீனவர்கள் பல்வேறு விதங்களில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மாவட்டத்தில் அபிவிருத்தி என்ற பெயரில் மன்னார் மண்ணையும், மன்னாரில் உள்ள வளத்தையும் சுரண்டிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் மக்களின் வாழ்வாதாரத்தையும், மக்களின் எதிர்காலத்தை அழிக்கின்ற ஒரு செயல்பாடாக இன்றைய சூழ்நிலை காணப்படுகிறது.

காற்றாலை என்ற பெயரில் மன்னாரினுடைய தீவுப்பகுதியில் பல அழிவுகரமான செயல்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

முக்கியமாக மன்னாரில் வாழ்வாதாரத்திற்காக மீனவர்கள் கடல் தொழில் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த மீனவர்களின் கடல் தொழில் நடவடிக்கைகளுக்கு பாரிய அச்சுரூத்தல்களாக காற்றாலை என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

எனவே காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மன்னார் தீவு பகுதியில் இல்லாமல் மக்கள் பயன்படுத்தாத பல இடங்கள் அருகில் இருக்கின்றன.

அந்த இடங்களில் காற்றாலைகளை அமைக்கின்ற போது மீனவர்களின் பிரச்சினைகளும், வாழ்வியல் பிரச்சனைகளும் இல்லாமல் போகும்.

நாங்கள் அபிவிருத்திக்கு தடையான வர்கள் இல்லை. எனினும் மக்களின் வாழ்வியல், உரிமை, தொழில் பாதிக்கப்படும் வகையில் உள்ள இந்த காற்றாலை திட்டத்தை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்.

மேலும் எமது மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் அயல் நாட்டு மீனவர்கள் எமது கடல் பகுதிக்கு வந்து எமது மீனவர்களின் வளத்தை கொள்ளையடித்து செல்கின்றனர்.

எமது மீனவர்கள் வாழ்வாதாரத்திற்காக பாடுபட்டு வருகின்ற நிலையில் அரசின் இவ்வாறான நடவடிக்கைகள் மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஒட்டு மொத்தமாக இல்லாது ஒழிக்கும் செயலாகவே காணப்படுகின்றது.

எனவே அரசாங்கம் மீனவர்களின் விடையத்தில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**- மன்னார் நிருபர் (27-02-2023)**

# மன்னாரில் ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளுடன் ஒருவர் கைது



மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பிரதான வீதியின் ஆடை தொழிற்சாலையின் பின் பகுதியில் உள்ள களப்பு பிரதேசத்தில் திங்கட்கிழமை (27) காலை ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடம் இருந்து 41 கிலோ 620 கிராம் கேரள கஞ்சா போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் விபுர்த்தி (83790) கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின் போது குறித்த கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பதில் கடமை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ASP பிரபாத்விதானகே வின் பணிப்பில், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொ.ப.ரத்நாயக, பொ.சா. ரத்னமணல தலைமையிலான அணியினரே மேற்படி கேரள கஞ்சா மற்றும் சந்தேக நபரையும் கைது செய்து உள்ளனர்.

சந்தேகநபர் கருங்கண்டல் வண்ணாங்குளம் பகுதியை சேர்ந்த 25 வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா என்பன மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளது.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க பிரதேச மட்ட சிறு கண்காட்சி மற்றும் விற்பனை



மன்னார் பிரதேசச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், பிரதேச மட்ட சிறு கண்காட்சி மற்றும் விற்பனை ஒவ்வொரு மாதமும் கடைசி திங்கட்கிழமை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

மன்னார் நகர சபையின் உதவியுடன் மன்னார் பிரதேசச் செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் வகையில் குறித்த கண்காட்சி மற்றும் விற்பனை ஒவ்வொரு மாதமும் கடைசி திங்கட்கிழமை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் நகர பிரதேச செயலகத்திற்கு முன் காணப்படும் மன்னார் நகர சபைக்குச் சொந்தமான வாராந்த சந்தை கட்டிடத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (27) பிரதேச மட்ட சிறு கண்காட்சி மற்றும் விற்பனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. மக்கள் எமது உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் உற்பத்திகளை பார்வையிட்டு கொள்வனவு செய்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என தெரிவித்தார்.



திங்கட்கிழமை (27) காலை பிரதேச மட்ட சிறு கண்காட்சி மற்றும் விற்பனை யை ஆரம்பித்து வைத்த பின் அவர் அவ்வாறு தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# நானாட்டான் பிரதேசத்தில் பல வீடுகளில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரம் திருடி வந்த நபரை பிடித்த மக்கள்




மன்னார் - நானாட்டான் பிரதேசத்தில் பல வீடுகளில் தொடர்ச்சியாக பெறுமதி மிக்க நீர் இறைக்கும் இயந்திரம் திருடி வந்த நபரை பொலிஸாரின் உதவியுடன் புதன்கிழமை (1) பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் சிலவற்றில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரம் களவாடப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் சந்தேகத்தில் அருவி ஆற்றங்கரையில் உள்ள தோட்டம் செய்யும் வீட்டு வளவை சோதனை செய்த போது திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த முருங்கன் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் இராசமடு அருவி ஆற்றங்கரையில் வசிக்கும் 39 வயது மதிக்கத்தக்க நபர் எனவும் குறித்த நபரிடம் இருந்து மூன்று நீர் இறைக்கும் இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

**- மன்னார் நிருபர்**



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## வில்லாதி வில்லன்களும் விழுந்த வரலாறு உண்டு

### (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 6)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**




அரசியலிற்கும் சினிமாவிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பது யதார்த்தம்.

இரண்டிலும் கதாநாயகர்கள், வில்லன்கள், அடிதடிகள், கொலை கொள்ளை, வன்செயல்கள், பலாத்காரம், அடிதடி, பித்தலாட்டம் என அந்த தொடர்பு பட்டியல் நீளும். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இது எந்த கதாநாயகரின் படமாக இருந்தாலும் பொருந்தும்.

இந்த இலக்கணம் அரசியல் (வியா) வாதிகளிற்கும் பொருந்தும். அவர்களும் ஒரு வகையில் வில்லன்கள் தானே?

இலங்கையில் இப்போது நாள்தோறும் அரங்கேற்றப்பட்டுவரும் அரசியல் நாடகங்கள் தமிழ் சினிமாவை மிஞ்சும் அளவுக்கு ரசிகர்களை கதிரைகளின் நுனிப்பகுதியில் உட்கார வைத்திருக்கின்றன. அடுத்தடுத்து வில்லன் என்ன செய்யப்போகிறான் என்று பார்வையாளர்கள் பயங்கரக்கோபத்தோடு பார்த்துக் கொண்டிருக்க, வில்லனும் வில்லனின் சகாக்களும் செய்யும் அட்டூழியங்கள் அளவுகடந்து போய்க்கொண்டிருக்கும் நிலையில் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிகேட்டு வீதியில் இறங்க வில்லன் கூட்டம் தனது அடியாட்களைவிட்டு எதிரானவர்களை அடித்து துவம்சம் செய்வார்கள்.

இப்படி ஒரு காட்சியையே கடந்த வாரம் நாம் இலங்கையில் காணமுடிந்தது.

கொழும்பில் இடம் பெற்ற ஜேவிபியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஒருவர் இறந்திருக்கிறார் இன்னொருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிகிறது. ஜே வி பி மீதான மக்களின் ஆதரவு முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு அதிகரித்திருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன.

அது ஜே விபியினரின் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் பற்றி மக்கள் தெளிவடைந்த காரணத்தினால் ஏற்பட்ட ஆதரவல்ல. மாறாக அவர்களும் திருடர்கள் இவர்களும் திருடர்கள் இந்தத் தடவை ஜே வி பிக்காவதுகொடுத்துப்பார்ப்போம் என்று முன்னைய ஆட்சியாளர்களின் கேவலமான நடத்தையின் காரணமாக ஏற்பட்ட வெறுப்புணர்வின் வெளிப்பாடாகும்.

இந்நிலையில் இப்போது தேர்தலை நடத்தினால் யானை மொட்டுக் கூட்டணி மற்றும் கைக்காரக் கட்சி உட்பட பலரும் மண்ணைக்கவ்வ நேரிடும் என்ற காரணத்தினாலேயே ஆட்சியாளர்கள் இப்போது தேர்தல் வேண்டாம் என்கிறார்கள். ஜேவிபிக்கு இதைத்தவற விட்டால் இது போன்ற இன்னொரு பொன்னான சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்காது. எனவே அவர்கள் பெருமளவில் மக்களைத்திரட்டி ஆர்ப்பாட்டங்களைச் செய்து தேர்தலை நடத்த அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முயல்கின்றனர். ஜனாதிபதியும் அரசாங்கமும் அவர்களது கூட்டாளிக்கட்சிகளும் எப்படியாவது தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்க அத்தனை தகிடுதித்தங்களையும் திருகுதாளங்களையும் செய்கின்றனர். தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் தொடக்கம் அது நடக்குமா நடக்காதா



என்ற கேள்வியிலேயே மக்களை வைத்திருந்தார்களேயன்றி நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்க என்ன செய்யப்போகிறோம் என்பது பற்றி கட்சிகள் சிந்திப்பதற்கு இடமளிக்கப்படவில்லை.

பொருளாதாரத்தை மீட்பது தான் முக்கியம். தேர்தலை மக்கள் கேட்கவில்லை என்றார்கள் எல்லாம் முடிந்து இறுதியில் வாக்குச் சீட்டு அச்சடிக்கப்பணமில்லை என்றார்கள் தேர்தல் ஆணையகத்திற்கு தேவையான நிதியைக் கொடுக்காமல் தடைசெய்தார்கள்.

ஆனால் நாட்டின் சுதந்திரதின வைபவத்தை ஜரூராக நடத்தவும் கண்டியில் ஜனஜய பெரஹராவை கோலாகலமாகக் கொண்டாடவும் தேவையான பணத்தை எந்த பிரச்சினையுமின்றி ஒதுக்க முடிந்துள்ளது.

முதலில் பணமில்லாததால் தேர்தல் இல்லை என்றார்கள். தேர்தலை நடத்துவதற்கு பணத்தைத்திரட்டிக்கொடுத்தாலும் அதில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சம்பளம் வழங்கப்பணமில்லை என்றார் ரணிலின் வலது கரங்களில் ஒன்றாகிய ருவான் விஜேவர்தன. இலங்கை ஜனாதிபதியோ சர்வ வல்லமை படைத்தவராயிற்றே- "ஐ" படத்திலே சொல்வது போல் அதற்கும் மேலே சென்று பாராளுமன்றத்திலே தேர்தல் அறிவிக்கப்படவே இல்லை அறிவிக்கப்படாத தேர்தலை எப்படிப் பிற்போடுவது என்றார்.




ஆகவே தமக்கு நிலைமை பாதகமாக இருக்கும் போது தேர்தலைப் பிற்போடுவதும் உரிமைகளை மறுப்பதும் இலங்கைக்குப் புதிதல்ல. 1974இல் நடக்கவேண்டிய பொதுத்தேர்தல் 1976இற்குப் பிற்போடப்பட்டு பின்னர் 1977இல் நடத்தப்பட்டு பதவியில் இருந்த மகாஜன எக்சத் பெரமுன அரசாங்கம் படுதோல்வியடைந்து மண்கவ்வியதும் வரலாறு.

அதே போல 1977 இல் கிடைத்த ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக 1982இல் நடத்தப்படவேண்டிய பொதுத்தேர்தலை நடத்தாமல் தடுக்க இந்திய நக்சலைட் தீவிரவாதிகள் இலங்கைத் தேர்தல் மேடைகளில் தாக்குதல் நடத்த வாய்ப்பிருப்பதால் தேர்தலை நடத்தாமல்- இருக்கிற அரசாங்கம் பதவியில் இருக்கவேண்டுமா இல்லையா என்பதற்கு மக்கள் கருத்துக்கணிப்பை நடத்தி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்டமையும் பலருக்கும் குறிப்பாக ஜேவிபிக்கு நன்கு தெரியும்.

ஆகவே அரசாங்கத்தின் கள்ள நோக்கங்களை அறிந்து கடுப்பாகிய ஜேவிபி மக்களை திரட்டி ஆர்ப்பாட்டம் செய்தது. அதனை எதேச்சாதிகார அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்கள் போராட்டத்தைக் கலைத்ததன் மூலம் தெளிவான ஒரு செய்தி சொல்லப்பட்டுள்ளது. ஜனநாயகம், தேர்தல் பற்றியெல்லாம் எமக்கு கவலையில்லை. போராட்டம் நடத்தினால் அடித்துக் கலைப்போம். நாங்கள் நினைக்கிற போது தான் தேர்தல் நடக்கும். இப்போது தேர்தல் இல்லை. போராட்டங்களை நடத்துவதால் IMF இடமிருந்து உதவி கிடைப்பதில் தடையேற்படுத்தும் என்பதால் அடித்துக் கலைப்பதைத் தவிரவேறு வழியில்லை என்பது தான் அது.

முன்பு செய்வது போல ஒளித்துநின்று அடிக்க முடியாத அளவுக்கு ஊடகங்களின் நேரலைகள் போய்க்கொண்டிருக்க ஆர்ப்பாட்டக் காரர்கள் மீதானதாக்குதல்களும் ஊர்வலக்காரர்களின் எதிர்வினைகளும் உடனடியாகவே உலகம் முழுதும் தெரியவந்தன.

எனினும் ஒரு விடயத்தைத் தெளிவாகத் தொடர்ந்து அவதானிக்க முடிகிறது.

கோட்டாபயவின் ஆட்சிக்காலத்தில் இது போன்ற தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போது எல்லாம் அதனை விமர்சித்த மேற்குலக ஊடகங்களும் இராஜதந்திர வட்டாரங்களும் இப்போது நடந்துகொண்டிருக்கும் ஜனநாயக விதிமீறல்கள் அடக்குமுறைகள் பற்றி கப்சிப் என்றுஇருந்து கொள்கின்றன. அதுபற்றி மூச்சு விடுவதாகக் கூடத் தெரியவில்லை.



மேற்குலகு சார்பான ஒருவர் ஆட்சியில் இருப்பதால் அவர் செய்வதெல்லாம் சரி என்று கருதும் தெரிவு செய்யப்பட்ட மறதிநோயில் (Alzheimer's disease) உலகம் சிக்கியிருக்கிறதோ என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது.

இதெல்லாம் என்ன இதைவிட இன்னொரு ஸ்பெஷல் ஐட்டம் ரெடியாக காத்திருக்கிறது. அரசாங்கம் புதிய வரிக்கொள்கை(ள)யை அறிமுக செய்து இரண்டாவது மாத சம்பளம் போடப்பட்டிருக்கிறது. ஆபிசர் தர அதிகாரிகளெல்லாம் சம்பளத்தில் எதுவும் மிஞ்சாமல் உயர் இரத்த அழுத்தத்தினால் ஆடிப்போயிருக்கிறார்கள். இதில் மாற்றங்களை ஏற்படுத்தி மூச்சுவிட அவகாசம் தரமுடியுமா என்பது பற்றி அண்மையில் ஜனாதிபதியுடன் நடந்த பேச்சுவார்த்தை பலரும் எதிர்பார்த்தது போலவே தோல்வியில் முடிந்திருக்கிறது. எங்களுக்கு இவ்வளவு தொகை பணம் வேண்டும் அதற்கு இந்த வரியை இப்படி அறவிட்டே ஆகவேண்டும் என்ற ஒரேயொரு நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் இலங்கை அரசாங்கமும் இருந்தார்களே தவிர அது நியாயமானதா அதனைச் செலுத்தக் கூடிய நிலையில் வரியிறுப்பாளர்கள் உள்ளார்களா வரியிறுப்பாளர்கள் கொண்டுள்ள பொறுப்புகள் என்ன? வரியின் பின்னர் வாழ்க்கையை நடத்தக்கூடியளவுக்கு அவர்களுக்கு தங்களது வருமானத்தில் ஏதாவது எஞ்சுமா? ஏன்பது பற்றிய எதுவிதமான கரிசனையோ அக்கறையோ கிஞ்சித்தும் இருக்கவில்லை. வெறும் ஜடங்கள் போல கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதும் IMF சொல்வதால் செய்கிறோம் என் பழியைத் திருப்பி விடுவதும் வெளிப்படையாகத் தெரிகிறது. இதேபோலத்தான் 1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தும் நோக்கில் ரணிலின் மாமாவும் IMF நமக்கு உதவிசெய்ய வருகிறது இதனைக் கட்டாயம் நாம் செய்ய வேண்டும் இல்லாவிட்டால் நாம் சாப்பிடுவதற்கு IMF காசு தராது என்று பாராளுமன்றத்தில் கூறி ஆதரவு தேடினார்.



இன்றைய நிலைமை மிகமிக மோசமாகவுள்ளது. IMF கண்ணசைத்தால் தான் எந்தப்பக்கத்தில் இருந்தும் இலங்கைக்கு கடன் கிடைத்து காசு நகரும். தாம் மேற்கொள்வது பிரபலமற்ற தீர்மானங்கள் என்பது தமக்குத் தெரியுமென்றும் பிரபலமடைய வேண்டிய தேவை தமக்கு இல்லையென்றும் நாட்டுக்குத் தேவையான தீர்மானங்களையே தாம் மேற்கொள்வதாகவும் கூறுகிறார்.

*(தொடர்ச்சி 11 பக்கம்)*



# வரி உயர்வு , மானியங்கள் வெட்டு: படைக்குறைப்பு இல்லை?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

ரணில் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப ஆடத் தொடங்கிவிட்டார். ஏற்கனவே உரமானியம் நிறுத்தப்பட்டு விட்டது. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மின் கட்டணங்களின்படி மின் மானியமும் நிறுத்தப்படலாம் என்று தெரிகிறது. அதாவது அரசாங்கம் மானியங்களை வெட்டத் தொடங்கி விட்டது. மேலும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் மாத வருமானம் பெறுவோருக்கு வரி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது நடுத்தர வர்க்கத்திற்கு வரி விதிக்கப்படுகிறது. அதன் விளைவாக படித்த நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கி விட்டது. இவ்வாறு புதிய வரிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் ஐ.எம்.எப்பின் மற்றொரு நிபந்தனையையும் ரணில் நிறைவேற்றி இருக்கிறார். அண்மையில் கண்டியில் உரையாற்றும் பொழுது அவர் அதைத் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றார். தான் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளையே நிறைவேற்றி வருவதாக. அப்படியென்றால் பன்னாட்டு நாணய நிதியம் அவரிடம் படையினரை ஆட் குறைக்கும்படி கேட்கவில்லையா?

ஏனெனில் இலங்கைத் தீவில் இப்போதிருக்கும் படையினரின் எண்ணிக்கை இந்த நாட்டின் ஜனத்தொகையோடு ஒப்பீடுகையில் அதிகமானது. நாட்டின் பொதுத்துறை ஊதியத்தில் சுமார் 50 மூபடைத்தரப்புக்கு வழங்கப்படுகிறது என்றும், உலகில் 100 பேர்களுக்கு எத்தனை படைவீரர்கள் என்ற விகிதத்தில் இலங்கை பத்தாவது இடத்தில் உள்ளது என்றும் நிஷான் டி மெல்-வெரிற்றே ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட்டின் பணிப்பாளர்-கூறுகிறார். இலங்கைத் தீவின் பாதுகாப்பு செலவினம் நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரச் செலவினங்கள் இரண்டையும் கூட்டி வரும் தொகையை விட அதிகமாக இருப்பதும் பொருளாதார சீரழிவுக்கு ஒரு காரணம் என்று நிஷான் கூறுகிறார்.

இவ்வாறு இலங்கைத் தீவு தன் வல்லமைக்கு மீறி, பருமனுக்கு பொருந்தா விகிதத்தில் பாதுகாப்புத் துறைக்கு அதிகரித்த நிதியை ஒதுக்கி வருகிறது. இது கிட்டத்தட்ட பாகிஸ்தானில் இருப்பதை ஒத்தது. பாகிஸ்தானிலும் படைத்துறை அந்த நாட்டின் தேவைக்கும் அதிகமாக வீங்கிப் பெருத்துக் காணப்படுகிறது. பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள ஒரே வேறுபாடு, பாகிஸ்தானில் அவ்வப்பொழுது படைத் தளபதிகள் ஆட்சியைக் கைப்பற்றுவதுண்டு, இலங்கைத்தீவில் அப்படியல்ல. ஆனால் பாகிஸ்தானை போலவே இலங்கையிலும் படைத்துறையானது, அரசியலை தீர்மானிக்கும் ஒரு பிரதான துறையாக காணப்படுகிறது.

இவ்வாறு ஒரு சிறிய தீவின் சனத் தொகை; தேவை; பருமன் என்பவற்றின் அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக இலங்கைத்தீவு அளவில் பெரிய படைக் கட்டமைப்பைக் கொண்டிருக்கிறது. அக்கட்டமைப்புக்கு அதிகளவு நிதியை ஆண்டுதோறும் ஒதுக்கி வருகிறது. நாட்டின் வளமனைத்தும் கொடுத்துப் பாதுகாக்கப்படும் படைத்துறையில் ஏறக்குறைய மூன்றில் இரண்டு பகுதி தமிழ் மக்களின் தாயகத்தில்தான் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதாவது தமிழ்ப் பகுதிகளை ராணுவ மயப்படுத்தும் நோக்கத்தோடு நாட்டின் பெருமளவு நிதி வடக்குக் கிழக்கில் கொட்டப்படுகிறது என்பதே உண்மை.

இவ்வாறு தன் வல்லமைக்கும் அளவுக்கு மீறி பாதுகாப்பு துறைக்கு அதிகளவு பணத்தைக் கொட்டும் ஒரு நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கும் பொழுது அதை மீட்க முற்படும் பன்னாட்டு நாணய நிதியம் பிரதான நிபந்தனியாக எதனை முன் வைக்க வேண்டும்? பாதுகாப்பு செலவினங்களை குறை என்று தானே கேட்க வேண்டும்? ஆனால் அப்படிக் கேட்கப்பட்டதாகத் தெரியவில்லையே? ஏனென்றால் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் கண்டியில் ஆற்றிய உரையின்படி நாட்டில் இதுவரையிலும் முன்னெடுக்கப்பட்டிருக்கும் பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் படைக்குறைப்புப் பற்றி ஒரு வார்த்தைதானும் பேசப்படவில்லை. அல்லது ஐ.எம்.எப் அவ்வாறு நிபந்தனைகளை விதித்திருந்தாலும் அரசாங்கம் உள்நாட்டு அரசியலைக் கவனத்தில் எடுத்து அதை மறைக்கக்கூடும்.

13 ஆவது திருத்தத்தையே அமுல்படுத்த வேண்டாம் என்று கேட்கும் பிக்குகள் படையினரின் எண்ணிக்கையை குறைத்தால் அல்லது பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதியை வெட்டினால் அதற்கு எதிராகவும் கிளர்ந்து எழுவார்கள். எனவே படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது என்ற விடயம் தென்னிலங்கையில் ஒரு அரசியல் தற்கொலையாகவே பார்க்கப்படும். அதனால் ரணில் விக்கிரமசிங்க படையினரில் கை வைக்கத் துணிவாரா?

ஆனால் அவ்வாறு படையினரின் எண்ணிக்கையை குறைக்காமல் இலங்கை தீவின் அரசு செலவினங்களை குறைக்க முடியாது. இலங்கைத் தீவைப் போலவே தனது அளவுப்பிரமாணத்துக்கு அதிகமாக படையினரைக் கொண்டிருக்கும் ஒரு நாடு பாகிஸ்தான். அங்கேயும் இப்பொழுது பொருளாதார நெருக்கடி பயங்கரமாக இருக்கிறது. அதன் விளைவாக அரசியலில் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கேயும் இப்போதுள்ள அரசாங்கம் அரசு செலவினங்களை குறைக்கப் போவதாக அறிவித்திருக்கிறது. அண்மையில் ரணில் விக்கிரமசிங்க அரச பிரதானிகள் விமான பயணங்களின்போது சாதாரண பயணிகளை போல பயணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார். அதை ஒத்த அறிவுறுத்தல்களை பாகிஸ்தானிய அரசும் அண்மையில் வழங்கியிருக்கிறது.

ஆனால் அவ்வாறு அரச ஊழியர்களின் அல்லது அதிகாரிகளின் அல்லது அரசுப் பிரதானிகளின் ராஜபோக செலவுகளை குறைப்பதன்மூலம் மட்டும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது. மாறாக படையினரின் ஆட்தொகையைக் குறைத்து, பாதுகாப்புச் செலவினங்களைக் குறைத்தாலே நாட்டின் பெருமளவு நிதி சேமிக்கப்படும். ஆனால் அந்த விடயத்தில் கை வைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க தயாரா?

சில சமயம் அதை அவர் வெளிப்படையாக செய்ய தொடங்கினால், பிக்குகள் அவருக்கு எதிராக கிளர்ந்து எழுவார்கள். பிக்குக்கள் மட்டுமல்ல சிங்கள பௌத்த ஜனத்தொகையில் பெரும் பகுதி அவ்வாறு அவருக்கு எதிராக கிளர்ந்து எழ முடியும். அப்படி எதிர்ப்புக் கிளம்பி எழப்போகிறது என்று கூறியே அவர் பன்னாட்டு நாணய நிதியத்தை சமாளிக்கவும் முடியும்.

அதாவது உரமானியத்தை வெட்டிய பொழுது விவசாயிகள் அதிக விலையைக் கொடுத்து எப்படி உரத்தைப் பெறலாம் என்றுதான் யோசித்தார்கள். அதிக விலை கொடுத்து வாங்கிய உரத்தில் செய்யப்பட்ட வேளாண்மையை அதிக விலைக்கு விற்றார்கள். வியாபாரிகள் அரிசியின் விலையை மேலும் கூட்டி விற்றார்கள். மொத்தத்தில் கூட்டப்பட்ட எல்லா விலைகளும் நுகர்வோர் மீது சுமத்தப்பட்டன. அவ்வாறே மின் வெட்டை நிறுத்திவிட்டு மின் கட்டனத்தைக் கூட்டியபோது, மக்கள் மின் நுகர்வை எப்படிக் குறைக்கலாம் என்றுதான் சிந்திக்கிறார்கள்.

ஆனால் வரி உயர்வு, மானிய வெட்டு போன்றவற்றின் விளைவாகத்தான் கடந்த ஞாயிற்றுக்க் கிழமை கொழும்பில் ஜேவிபி ஒழுங்குபடுத்திய கூட்டத்தில் அதிகளவு மக்கள் திரண்டார்கள். கடந்த புதன்கிழமை தொழிற் சங்கங்கள் நடத்திய போராட்டதுக்குக் பெருமளவுக்கு ஆதரவு கிடைத்தது. மக்கள் போராடக் கூடிய மனநிலையோடுதான் இருக்கிறார்கள். ஆனால் இந்தப் போராட்டங்களை இனவாதத்தின் மூலம் எளிதாகத் திசைதிருப்பலாம் என்ற நிலைமை தொடர்ந்துமிருக்கிறது. குறிப்பாக 13க்கு எதிராக பிக்குகள் திரண்ட போது நாட்டின் கவனம் விலைகளில் இருந்து இனவாதத்தை நோக்கி திருப்பப்பட்டது. அப்படித்தான் இனிமேலும் இனவாதத்தை கிளறினால் விலை உயர்வும், மானியங்கள் வெட்டப்பட்டமையும் மறக்கப்பட்டு விடும். கவனம் படையினரை ஆட் குறைக்கிறார்கள் என்ற விவகாரத்தின் மீது குவிக்கப்பட்டுவிடும். எனவே ஐ.எம்.எப் அதை ஒரு நிபந்தனையாக முன்வைத்தாலும்கூட அரசாங்கம் படையினரின் எண்ணிக்கையை குறைக்குமா என்பது சந்தேகம்தான்.

படையினரின் எண்ணிக்கையை குறைக்கவில்லை என்றால் வடக்கு கிழக்கை ராணுவமயநீக்கம் செய்ய முடியாது. அதாவது தொகுத்துக் கூறின் தன்னெழுச்சிப் போராட்டங்களுக்குப் பின்னரும் தென்னிலங்கையில் சிங்கள பௌத்த பெருந் தேசியவாதத்தின் மனோ நிலை மாறவேயில்லை.

வரி உயர்வு காரணமாக படித்த நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. இதே நடுத்தர வர்க்கம்தான் கடந்த ஆண்டு காலி முகத் திடலில் கிராமம் அமைத்துப் போராடியது. அல்லது போராடிய இளவயதுக் காரர்களுக்கு உளவியல் ரீதியாக ஆதரவை வழங்கியது. ஆனால் இப்பொழுது அதே படித்த நடுத்தர வர்க்கம் வரி உயர்வைக் கண்டு நாட்டை விட்டு ஓடுகிறது. ஒருபுறம் படித்த நடுத்தர வர்க்கம் நாட்டை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இன்னொரு புறம் அமெரிக்க விமானங்கள் படை அதிகாரிகளோடு ரகசியமாக நாட்டுக்குள் நுழைகின்றன. இந்தியாவின் உளவுத்துறை பொறுப்பாளரும் பாதுகாப்பு ஆலோசகரும் ரகசியமாக வந்து விட்டுப் போகிறார்கள். வடக்கில் கடலட்டை ஒரு ராஜதந்திரப் பொருளாக மாறிவிட்டது. ஒருபுறம் இச்சிறிய தீவை பேரரசுகள் தேடி வருகின்றன. இன்னொரு புறம் இச்சிறிய தீவின் படித்த மூளைசாலிகளோ நாட்டை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் மஹிந்த கனவு கண்ட ஆசியாவின் அதிசயமா?




(9 பக்கத் தொடர்ச்சி)

## விநாயகர் விமர்சனம்

எதிர்வரும் நாட்களில் போக்குவரத்து, சுகாதாரம், துறைமுகம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. ஏற்கெனவே பெரும்பாலான சேவைகள் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் அத்தியாவசியத் தேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன. தொழிற்சங்கப் போராட்டங்களை அடக்குவதற்கு உள்ள அத்தனை வழிகளையும் அரசாங்கம் கையாளும் என்பதற்கான முஸ்தீபாக இதனைக் கொள்ளலாம்.

அரசாங்கத்தின் முறையற்ற வரிக்கொள்கை காரணமாக ஏராளமான வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். இதனால் நாட்டின் சுகாதாரத் துறைபாரிய நெருக்கடியை எதிர்கொள்ளுமெனவும் விமர்சிக்கப்பட்டது. இப்போது 2500 வைத்தியர்களை ஆட்சேர்ப்பு செய்யப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளியேறிச் செல்லும் விமானிகளை பதிலீடு செய்யவும் இவ்வாறான அறிவிப்புகள் வெளிவரலாம். ஆகவே அரசாங்கம் தாம் எடுத்துள்ள தீர்மானங்களை நியாயப்படுத்தவும் அதற்கு எதிராக கிளம்புபவர்களை சட்டரீதியிலும் வேறுவகைகளிலும் அடக்கி நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க விரும்புவதாகவே தெரிகிறது. சமூகத்தில் எழக்கூடிய எதிர்ப்புகளை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்துவதையே பெரும்பாலும் இனி அடுத்துவரும் காலங்களில் எதிர்பார்க்க முடியும்.

தொடர்ச்சியான வேலை நிறுத்தங்கள் போராட்டங்கள் என இன்னொரு ரவுண்டு நிச்சயமற்ற தன்மை தொடர்வதற்கான வாய்ப்புகளே அதிகம். தான் எடுக்கும் உறுதியான நடவடிக்கைகள் பொருளாதார மீட்சிக்கு இட்டுச்செல்லுமென அரசாங்கம் நம்புகிறது நிலைமை வழமைக்கு திரும்பும் வரை எப்படியாவது ஆட்சியைத் தக்கவைத்துக்கொண்டால் அதன் பின்னர் மக்கள் கடந்த காலத்தை மறந்து விடுவார்கள் வழமைபோன்று அரசியலைத் தொடரலாம் என நம்புகிறார்கள்.

பொருளாதாரரீதியில் உறுதியற்ற நிலையில் உள்ள நாடுகளுக்கு IMF விதந்துரைத்த மருந்துகள் கடந்த காலங்களில் அந்நாடுகளைப் பாடாய்படுத்திக்கொண்டிருந்த நோய்களைச் சுகமாக்கிவிடுவதை அதைவிடப் பெரிய சமூக நோய்களை அங்கங்கே ஏற்படுத்தியுள்ளதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

ஆகவே IMF என்பது சர்வரோக நிவாரண சஞ்சீவி மருந்தல்ல. ஆகவே IMFக்கு எள் என்றால் எண்ணெய்யாக நிற்கும் ரணிலும் அவரது ஒட்டு அரசாங்கமும் இலங்கை மக்களை எங்கே கொண்டுபோய் விடப்போகிறார்களோ அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்.

இலங்கையில் சினிமா மிகவும் பிரபலமில்லை என்றாலும் நடிகர்களிற்கு குறைவில்லை. ஆனால் நாட்டில் கதாநாயகர்களை விட வில்லன்களே அதிகம். அதிலும் கதாநாயகர்களாக காட்டிக்கொள்ள முனைந்த வில்லன்களில் வீழ்ந்தவர்களே மிகவும் அதிகம்.


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி, | Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி, | Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation
உடற்பருமன் குறைத்தல் | Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


## மீண்டும் சூடு பிடிக்கிறது குருந்தூர்மலை விவகாரம்

- நடராசா லோகதயாளன்



**போ**ரினால் மிகவும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய சுற்றாடலில் இராணுவத்தினர் பௌத்த விகாரை ஒன்றை கட்டுவது தொடர்ந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

நீதிமன்ற உத்தரவையும் மீறி அங்கு கட்டுமானம் நடைபெறுவதை தமிழர் தரப்பு சுட்டிக்காட்டி நீதிமன்றம் சென்றுள்ளது.

குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் போலீஸ் மற்றும், தொல்லியல் திணைக்களத்தின் விளக்கத்திற்காக, இம்மாதம் 30ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றக்கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிசார் மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் எதிர்வரும் 30.03.2023 அன்று நீதிமன்றில் தோன்றி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராசா உத்தரவிட்டுள்ளார்.

குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர்சார்பில் புதன்கிழமை (1) நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில், முன்னாள் வடமாகாண-சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூகஆர்வலர் ஜுட் நிக்சன் ஆகியோரது வழக்கு இலக்கம் AR/673/18 இன் ஊடாகவே நகர்த்தல் பத்திரம் தாக்கல்செய்யப்பட்டது.

இதன்போது குருந்தூர்மலையில் நீதிமன்றக்கட்டளையை மீறி தொடர்ந்தும் சட்டவிரோதமாக பௌத்தவிகாரையின் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்தே நீதிபதியால் மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டது.



குருந்தூர்மலை தொடர்பாக வழக்கிலக்கம் AR/673/18 இல் தொடரப்பட்டுள்ள வழக்கில், 12.06.2022இற்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.07.2022 அன்று நீதிமன்றம் கட்டளை வழங்கிய வழங்கியபோதும் அந்த கட்டளையையும் மீறி குருந்தூர்மலையில் பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

23.02.2023 அன்று குருந்தூர்மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் சென்ற சமயம் நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைகள் மீறப்பட்டு தொடர்ந்தும் பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுவது தொடர்பில் நேரில் பார்வையிட்டவர்களில் ஒருவரான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 23.02.2023 அன்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 02.03.2023 அன்று முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றிலும் நீதமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்த நீதிபதி ரி.சரவணராஜா, குருந்தூர்மலையில் நீதிமன்றக்கட்டளையை மீறி பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலீசார் மற்றும், தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் ஆகிய தரப்பினர் இம்மாதம் 30ஆம் திகதி மன்றில் தோன்றி விளக்கமளிக்கவேண்டும் என உத்தரவிட்டார்.



# 1 கிலோ வெங்காயம் 2 ரூபாய்! விலை கடும் வீழ்ச்சியால் மகாராஷ்டிர பேரவைக்கு வெங்காய மாலை அணிந்து வந்த எம்.எல்.ஏக்கள்



வெங்காயம் விலை கடும் வீழ்ச்சியால் மகாராஷ்டிரத்தில் தேசியவாத காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏ.க்கள் வெங்காய மாலை அணிந்து கொண்டும், வெங்காய கூடைகளை தலையில் சுமந்து கொண்டும் சட்டப்பேரவைக்கு வந்தனர். விலை வீழ்ச்சியால், ஆசியாவிலேயே மிகப்பெரிய வெங்காய சந்தையான நாசிக் சந்தை திங்கள்கிழமை மூடப்பட்டது. இதையடுத்து வெங்காயத்துக்கு உரிய விலை கோரி எம்.எல்.ஏ.க்கள் வெங்காய மாலை அணிந்து சட்டப்பேரவைக்கு வந்தனர்.

கடந்த சில நாட்களாகவே வெங்காயம் விலை குறைந்து கொண்டே வந்தது. கிலோ ரூ.4-க்கு விற்ற வெங்காயம், திங்கள்கிழமை அதிரடியாக கிலோ ரூ.2 என குறைந்த்து. இதனால் அதிர்ச்சியும் கோபமும் அடைந்த விவசாயிகள் சந்தையை இழுத்து மூடினர்.

வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,500 நிவாரண உதவியாக தர வேண்டும். அரசு வெங்காயத்தை கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விலைவைத்து வாங்க முன்வர வேண்டும். இல்லையெனில் வெங்காய விற்பனை ஏலம் நடத்தவிடமாட்டோம் என்று விவசாயிகள் பிரிதிநிதி ஒருவர் தெரிவித்தனர்.

ஆனால், வெங்காயம் குவிண்டாலுக்கு ரூ.200 என விலை போனது. (அதாவது ஒரு கிலோ வெங்காயம் இரண்டு ரூபாய்). திங்கள்கிழமை சராசரியாக வெங்காயம் குவிண்டால் 400 முதல் 500 ரூபாய்க்கு விலைபோனது. அதிகபட்சமாக தரமான வெங்காயம் குவிண்டாலுக்கு ரூ.800 என விற்பனையானது.

இந்த நிலையில் வெங்காயத்துக்கு உரிய விலை கிடைக்காததால் ஆத்திரமும் அதிர்ச்சியும் அடைந்த விவசாயிகள் நாசிக் சந்தையை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெங்காயம் விலைவீழ்ச்சி அடைந்துள்ளதால் அரசு விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1,500 நிவாரண உதவி அறிவிக்க வேண்டும். வெங்காயத்தை அரசே ரூ.20 கொடுத்து கொள்முதல் செய்ய வேண்டும் என்று வெங்காய சாகுபடியாளர்கள் வலியுறுத்தினர்.

இந்த நிலையில் முதல்வர் ஏக்நாத் ீண்டே, துணை முதல்வர் தேவேந்திர பட்னவிஸ் ஆகியோருடன் பேசி ஆவன செய்யப்படும் என்று அமைச்சர் தாதா புஸே உறுதியளித்ததை அடுத்து விவசாயிகள் போராட்டத்தை கைவிட்டனர். இதைத் தொடர்ந்து செவ்வாய்க்கிழமை ஏலம் நடைபெற்றது.






# உதயன் கட்டுரையால் உதவி பெற்ற கிராமம்: ஒரு நேரடி ரிப்போர்ட்

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்



கனடா உதயனில் அண்மையில் வெளியான கட்டுரை ஒன்று வறுமை மற்றும் இயற்கை அச்சத்தின் நடுவே வாழ்ந்துவரும் பலருக்கு சில உதவிகளைப் பெற்றுத்தந்துள்ளது. நெடுங்கேணி, ஒலுமடு, காஞ்சுரமோட்டைப் பகுதியில் வசிக்கும் மக்களின் நிலை தொடர்பில் வெளிவந்த செய்தியினையடுத்து புலம்பெயர்ந்து வசிக்கும் உறவுகள் சிலர் உதவி புரிந்தனர்.

காஞ்சுரமோட்டை தொடர்பில் முதன் முதலாக "கனடா உதயனில்" வெளிவந்த செய்தி தொட்பில் ஊடகவியலாளர் சகிதம. நேரில் சென்று காஞ்சுரமோட்டை, ஒலுமடு, வெடிவைத்தகல் கிராமங்களினதும் அவர்களின் அவலங்களையும் நேரில் பார்வையிட்டதன் பின்னர் அங்கே வசிக்கும் குடும்பங்களிற்கு தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியிலான உதவிகள் செய்தியாளர் ஊடாக ஒரு தடவை வழங்கி வைக்கப்பட்டது.

அமெரிக்காவினைச் சேர்ந்த மருத்துவர் ஜெயக்குமாரன், சிவசுப்பிரமணியம், சிறிமகிழ்காந்தன், ஆசீர்வாதம் மற்றும் சிவபாலன் மற்றும் ஹூல் குடும்பத்தினர் இணைந்து செய்தியாளர் நடராசா லோகதயாளன் ஊடாக இந்த உதவிப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

தமிழர் தாயகப் பகுதியை பாதுகாக்க வேண்டும், நில உரிமை வேண்டும் எனக் குரல் கொடுத்தாலும் இருக்கும் நிலத்தை பாதுகாப்பவர்களை திரும்பிப்பார்க்க மறந்து விடுகின்றோம் என்ற குற்றச் சாட்டு உண்மையாகவே தெரிகின்றது. இதிலே வடக்கின் எல்லைப் பகுதியை பாதுகாக்கும் நோக்கில் பெரும் வனப் பகுதியில் அடிப்படை வசதிகள் எவையும் இன்றி அல்லல்படும் இந்த மக்களின் அவலத்தை வெளியே எடுத்துவந்த நிலையில் அம்மக்களிற்கு கிடைத்த முதல் உதவி இதுவாகும்.

இப்பிரதேசத்தை சேர்ந்த 40 குடும்பங்களிறகு இந்த உதவிகள் 24ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டன. இதேநேரம் இதன்போது சிறுவர்கள், முதியவர்கள், நோயாளிகள் தனியாக கவனிக்கப்பட வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

இங்கே வாழும் மக்கள் தமிழர்களின் எல்லையை காக்கும் எல்லைப்படை வீரர்கள்போன்று போர்க் காலத்தை ஒத்த வாழ்வினைவாழும் அல்லது வாழ்கின்ற மக்களிற்கு அவர்களின் அடிப்படை வசதிகள்கூட பூர்த்தி செய்யப்படாதமையால் வாழுகின்ற இடங்களில் இருந்து மீண்டும் இடம்பெயர்கின்றனர். காஞ்சுரமோட்டையில் குடியேறிய 41 குடும்பங்களில் 18 குடும்பங்கள் மீண்டும. வவுனியாவிற்கே திரும்பி சென்றுவிட்ட நிலையில் எஞ்சியவர்களும் தமது அவலத்தின் காரணமாக வெளியேறவே முற்படுகின்றனர். இதனால் தமிழ் மக்களின் இருப்பு, தாயக பூமி, நிலம் அபகரிப்பு என வாய் கிழிய கத்துவதில் பயன் ஏதும் கிட்டாது. அந்த அடர்ந்த காட்டின் நடுவே வாழும் அந்த மக்களிற்கு நிரந்தர தொழில் வாய்ப்பு கிடையாது, இரு குடும்பங்களிற்கு மின்சார வசதியும் இல்லை, குடிநீருக்கு நீண்ட தூ ரம் பயணிக்க வேண்டும்.

இவை அனைத்திற்கும் மேலாக நாம் பயணித்த வாகனச் சாரதி அந்த மக்களின் பசி போக்கும் பொருட்கள் எனபதனால் இந்த வீதியில் வாகனத்தை செலுத்துகின்றேன் இல்லையேல் கோடி ரூபா வழங்கினாலும் இந்த வீதிக்கு வாகனத்தை திருப்பவே மாட்டன் என்றார்.

சாரதியின் இந்தவொரு கூற்றே அந்த மக்களின் அவலத்தை படம்போட்டுக் காட்டும். ஏனெனில் வீதியில் குண்டும் குழியும் அல்ல மாறாக குண்டும் குழியிலுமே அந்த பாதை காணப்படுகின்றது. இவர்களின் நிலை இதுவெனில் அங்காலே வெடி வைத்த கல் பகுதியில் வாழும் மக்கள் தினமும் காலையில் எழுந்தால் தமக்கான பணியை சிந்தித்தார்களோ இல்லையோ வீதியால் பயணிக்கலாமா, எங்கேனும் ஊடுருவல் உண்டா, யானை என்ன செய்துள்ளது எனபதனை அறிந்த பின்பே பயணிக்க வேண்டியுள்ளது.

மறுபுறம் புளியங்குளம் பகுதியில் 2004 ஆம் ஆண்டு 197 குடும்பங்கள் வாழ்ந்த மிகப் பெரிய கிராமத்தை நாம் அடைந்தபோது நெஞ்சு கனத்தது. ஆரம்ப பாடசாலை ஒன்று நெற் களஞ்சியமாகவே உள்ளது. அவ்வாறானால் அந்த கிராம மாணவர்கள் கல்வி கற்பதில்லையா, இங்கே கல்வி கற்ற மாணவர்கள் எங்கே என அருகில் இருந்த வீட்டின் முதியவரை வினாவினேன். அதற்கு ஒரு நிமிடம் மௌனம் காத்த முதியவர் தம்பி நீங்கள் எங்கிருந்து வாறீங்கள் என என்னிடம் பதில் கேள்வியே எழுப்பினார். எனக்கு ஏதும் புரியவில்லை. இருந்தபோதும் அறிமுகம. செய்தபோது செய்திக்காவது எமது கிராமத்தை எட்டிப் பார்க்கின்றீர்கள் நல்லது என்றவர் விபரத்தை கூறினார்.



இன்றைய சூழலில் இது மிகப் பெரும் கிராமந்தான் 197 குடும்பங்கள் இருந்தபோது பாட-சாலைகள், கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் இருந்தன. ஆனால் இன்று இருப்பது வெறும் 16 குடும்பங்கள் மட்டும்தான் என பெருமூச்செறிந்து எவ்வாறு வாழ்ந்த கிராமம் இன்று இரவானால் எந்தவொரு ஆபத்து என்றாலும் கூக்குரல் எழுப்பினால் எவருமே கிடையாது. மா-றாக தொலைபேசியில் ஒ லு ம டு வ ி ல ் வாழ்பவர்களை அழைக்க வேண்டும் அவர்களும் ஓடிவர முடியாது. ஏனெ-னில் யானை வீதியின் நடுவே எங்கு நிற்குமோ அதுவும் தெரியாது. பாடசாலை உண்டு ஆனால் ஆசிரியர்களும் மாணவர்களும் இல்லை. இதனால் நெல. அடுக்குவதற்காகவேனும் பயன்படுகின்றது என்றார்.

இவ்வாறெல்லாம் அணர்த்தங்களின் மத்தியில் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழும் இந்த மக்களிற்கு நெல் மட்டும் இருப்பதனாலும் அயல் கிராமங்களில் தேங்காயை பெறமுடிவதனால் சோறும் சம்பலுமே அதக நாள் உணவாகின்றது என்பதனை உணர்ந்தோம்.

மறுபுறத்தில் இத்தனை அவலத்திலும் விவசாயத்தையும் அந்த விவசாய வேலைக்கு கூலிவேலையாக செல்வதனை மட்டுமே நம்பி வாழும் மக்கள் விவசாயத்திற்கோ அல்லது கூலி வேலைக்குச் செல்வதற்கு, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதற்கு துவிச்சக்கர வண்டிகூடக் கிடையாது என்பதனால் கால் நடையில் பயணிக்கின்றனர். காஞ்சுரமோட்டையில் வாழும் 23 குடும்பங்களில் ஒரே ஒருவரிடம் காணம்படும் மோட்டார் சைக்கிலே அந்த கிராமத்திற்கான அவசர தேவை வாகனமாகவுள்ளது. அதுவும. பெயரிற்கே மோட்டார் சைக்கில் எப்போது கைவிடும் என்பதனை கூற முடியாத நிலை.

இத்தனை அவலங்களை சுமந்த மக்கள் எம்மை வழி அனுப்பினார்கள் என்பதனைவிட மீண்டும் வருவோம் என எதிர் பார்க்கின்றனர் என்பதே உண்மை ஏனெனில் எமக்கான மதிய உணவு அங்கே வாழும் ஓர் வீட்டிலேயே தயார் செய்யப்பட்டது.

எமது கட்டுரையை அடுத்து அம்மக்களிற்கு உதவிய அனைவருக்கும் உதயன் ஆசிரியர் பீடம் தனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.



MP Salma Zahid
International Women's Day
Sunday, March 12, 2023

Join Salma Zahid, your Member of Parliament for Scarborough Centre, to celebrate International Women's Day

Every Woman Counts



DATE: Sunday, March 12, 2023
TIME: 1:00 PM to 3:00 PM
LOCATION: Ellesmere Community Centre
ADDRESS: 20 Canadian Road, Scarborough, ON M1R 4B4

Salma Zahid, MP Scarborough Centre

Office:
5-2155 Lawrence Avenue East
Scarborough, ON M1R 5G9
Tel. (416) 752-2358
Email. Salma.Zahid@parl.gc.ca

szahid.liberal.ca
@SalmaZahid15
SalmaZahid15

# 31ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 14 - 03 - 1941

மறைவு: 01 - 02 - 2023

## திரு. சுப்பிரமணியம் பரமேஸ்வரன்

(யாழ்ப்பாணம், அரியாலை)

(முன்னாள் இலங்கைத் தூதரகச் செயலாளர் (கென்யா மற்றும் இந்தோனேசியா) மொழிபெயர்ப்பாளர் - கனடா - Former Secretary, Sri Lankan High Commission - Kenya and Indonesia - Interpreter in Canada)

யாழ். அரியாலையை பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமேஸ்வரன் அவர்கள் 01-02-2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், பல வழிகளாலும் தொடர்பு கொண்டு தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள், நண்பர்கள். எமது இல்லத்திற்கு வந்த நேரில் அனுதாபம் தெரிவித்தவர்கள், மேலும் உணவு உட்பட பல வழிகளில் உதவிகள் வழங்கியவர்கள் என அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*கவனமாய்க் கற்று கல்வியில் உயர்ந்து*
*கனதியாய் அரச உயர் பதவிகளை எட்டியவரே*
*கரம்பிடித்தவரை கனிவோடு வாழ்க்கை முழுவதும்*
*காவிச் சென்று பெற்ற பிள்ளைகளையும் பிரியமாய் வளர்த்து*
*புவனத்தில் சிறந்த புருஷராய் பாசமுள்ள பிதாவாய்*
*பக்குவமாய் உறவினர்கள் நண்பர்கள் என அனைவரோடும்*
*இயல்பாய் பழகி இன் சொற்கள் பகிர்ந்து இறுதிவரை வாழ்ந்தீரே!*
*இப்போது உங்கள் முகம் காண முடியாமல் தவிக்கின்றோம் அப்பா!*

*தங்களைத் துணைவராய் பெற்றவர் பெருமையொடு கண்ணீர் சொரிய*
*தயவுள்ள தந்தையாய் அன்பைப் பெற்று வளர்ந்த பிள்ளைகளும்*
*எங்கினும் காணாத மனிதருள் மாணிக்கத்தை இழந்தோமே என வருந்த*
*எத்திக்கிலும் வாழும் நண்பர்கள் உறவினர்கள் நன் மதிப்பு கொண்டவர்கள்*
*ஏன் இவரை இழந்தோம் என ஏங்கி நிற்க தங்கள் இறுதிப் பயணம் நிகழ்ந்தது*
*நாட்கள் கழிகின்றன வேகமாய் ஆனால் நாமோ அமைதியாய் அழுகின்றோம்*
*அன்பை அள்ளித் தந்த ஆசைக் கணவரை அருமை அப்பாவை மாமாவை*
*அருமை அப்பப்பாவை காலன் கவர்ந்து சென்ற நாள் முதலாய் கலங்குகின்றோம் இங்கு.*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

தங்கள் பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மைத்துனர்கள், சகோதர சகோதரிகள் மற்றும் பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு:
மனைவி / மகள்: (416) 548-7477
மகன் - அசோக்குமார் (கனடா): (416) 464-4777
மகன் - ரஞ்சித்குமார் (பிரான்ஸ்): +33646593907
சகோதரர் - சண்முகலிங்கம் (கனடா): (905) 840-6039


SUBRA MORTGAGE FINANCIAL
SUBRA
MORTGAGE SOLUTIONS
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
Canada Trust
RFA
BANK OF CANADA
FIRST NATIONAL
FINANCIAL LP
HOME TRUST
MCAP

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ். இளங்கோவன் அபார வெற்றி முழு விவரம்

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசு 43,923 வாக்குகள் மட்டுமே பெற்றார். தேமுதிக, நாம் தமிழர் உள்ளிட்ட 75 வேட்பாளர்கள் டெபாசிட் தொகையை இழந்தனர்.ஈரோடு கிழக்கு தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ திருமகன் ஈவெரா மறைவையடுத்து, இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில் காங்கிரஸ் சார்பில் ஈவிகேஎஸ்.இளங்கோவன், அதிமுக சார்பில் கே.எஸ்.தென்னரசு, தேமுதிக சார்பில் ஆனந்த், நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன் உள்ளிட்ட 77 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இங்கு கடந்த 27ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது.இதில் 1 லட்சத்து 70 ஆயிரத்து 192 வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவு 74.79 சதவீதம். தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. நேற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில், முதலில் அஞ்சல் வாக்குகள் எண்ணப்பட்டன. மொத்தம் பதிவான 398 அஞ்சல் வாக்குகளில், காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் 250 வாக்குகளும், அதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசு 104 வாக்குகளும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மேனகா நவநீதன் 10 வாக்குகளும், தேமுதிக வேட்பாளர் ஆனந்த் ஒரு வாக்கும் பெற்றனர்.



அதேபோல, சமாஜ்வாதி வேட்பாளர் மற்றும் சுயேச்சைகள் 7 வாக்குகளைப் பெற்றனர். நோட்டாவுக்கு ஒரு வாக்கு கிடைத்தது. 25 வாக்குகள் செல்லாத வாக்குகளாக அறிவிக்கப்பட்டன.தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகள் எண்ணிக்கை தொடங்கியது. முதல் சுற்றில் தொடங்கி, இறுதிச் சுற்று வரை ஈவிகேஎஸ். இளங்கோவன் தொடர்ந்து முன்னிலையில் இருந்தார். 15வது சுற்றின் நிறைவில், காங்கிரஸ் வேட்பாளர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் 1 லட்சத்து 10 ஆயிரத்து 156 வாக்குகள் பெற்று, வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் கே.எஸ். தென்னரசு 43,923 வாக்குகள் பெற்றார்.

இதையடுத்து, தேர்தல் நடத்தும் அலுவலர் க.சிவக்குமார், இடைத்தேர்தலில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை ஈவிகேஎஸ்.இளங்கோவனிடம் வழங்கினார்.34 ஆண்டுகளுக்கு பிறகு...: ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் தொகுதியில், 1984ல் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்ற ஈவிகேஎஸ்.இளங்கோவன், தமிழக சட்டப்பேரவையில் முதல்முறையாக நுழைந்தார். பின்னர், மத்திய அமைச்சர், காங்கிரஸ் மாநிலத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்த ஈவிகேஎஸ்.இளங்கோவன், 34 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது ஈரோடு கிழக்கு எம்எல்ஏவாகத் தேர்வு பெற்று, தமிழக சட்டப்பேரவைக்குச் செல்கிறார்.கடந்த தேர்தலில் இந்த தொகுதியில் போட்டியிட்ட திருமகன் ஈவெரா 67 ஆயிரத்து 300 வாக்குகள் பெற்ற நிலையில், தற்போது 1 லட்சத்து 10 ஆயிரத்து 156 வாக்குகள் பெற்று, 66 ஆயிரத்து 233 வாக்குகள் வித்தியாசத்தில் ஈவிகேஎஸ். இளங்கோவன் அபார வெற்றி பெற்றுள்ளார்.

இந்த தேர்தலில் நாம் தமிழர், தேமுதிக கட்சிகள் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. கடந்த சட்டப்பேரவை பொதுத் தேர்தலில், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் 11,629 வாக்குகளைப் பெற்றார். இந்த தேர்தலில் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்ட நிலையில், அக்கட்சியின் வாக்கு சதவீதம் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், வாக்கு எண்ணிக்கை நிறைவில், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் 10,827 வாக்குகள் மட்டுமே பெற்று, மூன்றாமிடம் பெற்றார். அதேபோல, தேமுதிக வேட்பாளருக்கு ஆதரவாக அக்கட்சியின் பொருளாளர் பிரேமலதா உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்த நிலையில், அக்கட்சிக்கும் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் ஒற்றை இலக்கத்தில் வாக்குகளைப் பெற்ற தேமுதிக வேட்பாளர் ஆனந்த், 1,432 வாக்குகள் மட்டுமே பெற்று பின்னடைவைச் சந்தித்துள்ளார்.இந்த தேர்தலில் ஈவிகேஎஸ்.இளங்கோவன் அபார வெற்றி பெற்ற நிலையில், திமுக, காங்கிரஸ் கட்சியினர், ஈரோட்டில் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

# நடிகர் வடிவேலு, இசையமைப்பாளர் தேவா உள்ளிட்டோருக்கு போலி டாக்டர் பட்டம் வழங்கிய விவகாரம்: தனியார் அமைப்பு மீது காவல் துறையில் புகார்




சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள கலையரங்கில் தனியார் அமைப்பு சார்பில் நடிகர் வடிவேலு, இசையமைப்பாளர் தேவா உட்பட 40 பேருக்கு போலிகவுரவ டாக்டர் பட்டம் வழங்கிய விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தனியார் அமைப்பு மற்றும் அதன் நிர்வாகிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அண்ணா பல்கலைக் கழகம் சார்பில் காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சென்னை அண்ணா பல்கலைக்கழக பொறுப்பு பதிவாளர் ரவிக்குமார் கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் அளித்துள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது: சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள விவேகானந்தா கலையரங்கில் கடந்த 26ம் தேதி சர்வதேச ஊழல் தடுப்புமற்றும் மனித உரிமை கவுன்சில் என்ற தனியார் அமைப்பு சார்பில் சினிமா உட்பட பல்வேறுபிரபலங்களுக்கு விருது வழங்கும்நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை அந்த தனியார் அமைப்பின் இயக்குநர் ஹரிஷ் என்பவர் செய்திருந்தார்.


கடந்த நவம்பர் 10ம் தேதிஹரிஷ் உள்ளிட்டோர் பல்கலைக்கழக அலுவலர்களை சந்தித்து ,பிப்ரவரி 26 ம் தேதி கின்னஸ் சாதனைபடைத்தவர்கள், பல்வேறு துறையில் சிறந்து விளங்குபவர்களை கவுரவிக்கும் வகையில் விருது வழங்கும் விழா நடைபெறவுள்ளது.இந்நிகழ்ச்சியில் முக்கிய பிரபலங்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், நீதிபதிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே, அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில் இவ்விழாவை நடத்துவதற்கு அனுமதி வேண்டும் என்று கூறி ஓய்வுபெற்ற நீதிபதி வள்ளிநாயகம் கையெழுத்திட்ட கடிதத்தை கொடுத்தனர்.அந்த கடிதத்தின் அடிப்படையில் அவர்கள் விருது வழங்கும் நிகழ்ச்சி நடத்த அனுமதியளிக்கப்பட்டது. மாறாக அவர்கள் சினிமா பிரபலங்களான நடிகர் வடிவேலு, இசையமைப்பாளர் தேவா, நடன இயக்குநர் சாண்டி உட்பட பல பிரபலங்களுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி கவுரவித்த நிகழ்வு சமூக வலைதளம் மற்றும் செய்திகளில் வெளியானது.இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம்.

மேலும், அண்ணா பல்கலைக்கழக பெயர் மற்றும் லோகோவை சட்ட விரோதமாக பயன்படுத்தியது தெரியவந்தது. உடனடியாக இதுகுறித்து ஓய்வு பெற்ற நீதிபதி வள்ளிநாயகத்திடம் கேட்டபோது, அவர் 'நான் எந்த கடிதமும் அளிக்கவில்லை, என்னுடைய கையெழுத்தை போலியாக போட்டு மோசடி செய்துள்ளனர்' என தெரிவித்தார். இவ்வாறு அண்ணா பல்கலைக்கழகத்தின் பெயர் மற்றும் லோகோ வையும், ஓய்வுபெற்ற நீதிபதி வள்ளிநாயகம் பெயரையும் தவறாகபயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட சர்வதேச ஊழல் தடுப்பு மற்றும் மனித உரிமை கவுன்சில் இயக்குநர் ஹரிஷ் மற்றும் அந்த அமைப்பின் நிர்வாகிகள் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் குறிப்பிடப்பட்டிருந்ததாக போலீஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து ஹரிஷ் மீது போலி ஆவணம் தயாரித்தல், நம்பிக்கை மோசடி உள்பட 7 பிரிவுகளின் கீழ்போலீஸார் வழக்குப் பதிந்துள்ளனர். தலைமறைவாக உள்ள அவர்விரைவில் கைது செய்யப்படுவார் என போலீஸார் தெரிவித்துள்ளனர்.

# பங்காரு அடிகளார் 83வது பிறந்த நாள் விழா: ரூ.3 கோடி உதவிப் பொருட்கள் வழங்கல்




மேல்மருவத்தூர் ஆன்மிக குருபங்காரு அடிகளாரின் 83வது பிறந்தநாள் விழா இன்று நடைபெறுகிறது. இந்த விழாவை ஒட்டி நேற்று அதிகாலை 3 மணிக்குஆதிபரா சக்தி அம்மனுக்கு மங்கல இசையுடன் அபிஷேக ஆராதனை நடைபெற்றது.பின்னர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்துக்கு ஆன்மிக குரு பங்காரு அடிகளாரை தங்க ரதத்தில் விழுப்புரம், கடலூர் மாவட்டசெவ்வாடை பக்தர்கள் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

அவரை பிரதமர் மோடியின் சகோதரர் பங்கஜ் தாமோதர் தாஸ் மோடி சந்தித்து ஆசி பெற்று, ஆதிபராசக்தி அம்மனை வழிபட்டார். பின்னர் நேற்று மாலை ஆதிபராசக்தி ஆன்மிக இயக்க அரங்கில் ரூ.3 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஆதிபராசக்தி ஆன்மிக இயக்க தலைவர் லட்சுமி பங்காரு அடிகளார் தலைமை தாங்கி,பேருரையாற்றினார். ஆதிபராசக்தி ஆன்மிக இயக்க துணைத் தலைவர் தேவி வரவேற்றார். விழா மலர் வெளியிடப்பட்டது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.எம்.டி.டீக்காராமன், வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் யூனியன் மேலாளர் கிறிஸ்டோபர் டெய்லர் கிராஃப்ட் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இருசக்கர வாகனம், சைக்கிள், கல்வி உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் சைக்கிள் உள்ளிட்ட ரூ.3 கோடி மதிப்பிலான 115 விதமான நலத்திட்ட உதவிப் பொருட்களை 3100 ஏழை எளியவர்களுக்கு பங்காரு அடிகளார் வழங்கினார். முன்னதாக பங்காரு அடிகளாரின் பிறந்தநாள் விழாவையொட்டி ஜூம் செயலி மூலம் சுமார்15 நாடுகளிலிருந்து 8,310 பக்தர்கள் ஒரே நேரத்தில் 2.42 கோடி முறை மந்திரங்களை உச்சரித்து உலக சாதனை படைத்தனர்.

இந்த சாதனைக்கான விருதை ஆன்மிக குரு பங்காரு அடிகளாரிடம் விழா மேடையில் வேர்ல்ட் ரெக்கார்ட் யூனியன் மேலாளர் கிறிஸ்டோபர் டைலர் கிராப்ட் வழங்கினார். இன்று ஆன்மிக குரு பங்காரு அடிகளாரின் பிறந்தநாள் விழா ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் கோலாகலமாக நடைபெற உள்ளது.

# மலையக தமிழரின் பிரச்சனை & தீர்வில் பிரித்தானியாவிற்கு தார்மீக கடப்பாடு உள்ளது: மனோ



“மலையக தமிழரின் பிரதான எதிர்பார்ப்பு இந்நாட்டின் தேசிய நீரோட்ட அரசியல் வரைபுக்கு உள்ளே முழுமையான பிரஜைகளாக வேண்டும் என்பதாகும். சட்டப்படி நாடற்றோர் இன்று இல்லை. எல்லோருமே பிரஜைகள். ஆனால், நமது மக்கள் முழுமையான பிரஜைகள் இல்லை. எமது பாதை உள்நோக்கிய பாதை. பிரிட்டன் இலங்கை அரசுடனான தமது நல்லுறவுகளை பயன்படுத்தி எமது இந்த இலங்கை கனவை நனவாக்க உதவ வேண்டும்.” என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் பிரிட்டனிடம் வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார துணை பணிப்பாளர் மாயா சிவஞானம், பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன், அரசியல் அலுவலர் ஜோவிடா அருளானாந்தம் மற்றும் தமுகூ தலைவர் மனோ கணேசன், இதொகா பொதுசெயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பின் போது, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறியுள்ளார்.

இன்றும் நவகாலனித்துவ அடிமைகளாக நாட்டிலேயே மிகவும் பிறபடுத்தப்படும், வறுமையிலும் உழலும் மலையக மக்களை இந்தியாவிலிருந்து காபி மற்றும் தேயிலை தோட்டங்களில் வேலை செய்ய பிரித்தானியர்களே அழைத்துவந்தனர் என்பதை அவர் பிரிட்டிஷ் தரப்பிற்கு சுட்டிக்காட்டினார்.

“பிரித்தானியாவின் தார்மீக பொறுப்பு, பிரிட்டீஷ் அரசாட்சி, இம்மக்களை இருநூறு வருடங்களுக்கு முன்னர் தொடக்கம் தென்னிந்திய தமிழகத்திலிருந்து கொண்டு வர ஆரம்பித்ததுடன் ஆரம்பமாகிறது. அன்று முதல் எமது மக்கள், உலகம் கண்டிராத கடுமையான உழைப்பின் மூலம், இன்றுவரை மிகப்பெரிய ஏற்றுமதி தொழில் துறையாக இருக்கின்ற பெருந்தோட்டங்களையும், பெரும் நெடுஞ்சாலைகளையும், பாரிய ரயில் பாதைகளையும், கொழும்பு துறைமுகத்தையும் அமைத்து, அன்று சிலோன், இன்று ஶ்ரீலங்கா என்ற இலங்கையை உருவாக்கியுள்ளார்கள்”.

இலங்கையின் வளர்ச்சிக்கு தமது குருதி மற்றும் உழைப்பின் மூலம் 200 வருடங்களாக இந்திய வம்சாவளி மக்கள் பாரிய பங்காற்றி வந்தாலும், அவர்கள் இன்னும் இரண்டாம்தர குடிமக்களைவிடவும் மோசமாக நடத்தப்படுகின்றனர் என்று மனோ கணேசன் மாயா சிவஞானம் மற்றும் அவரது குழுவினரிடம் கூறினார்.

மலையக மக்களின் பங்களிப்பை மற்றும் உழைப்பை புறந்தள்ளி, நாட்டை கட்டியெழுப்ப தன்னலமின்றி எவ்விதமான வசதிகளும் வளங்களும் இன்றி அர்ப்பணித்துக் கொண்டவர்கள் குடியுரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்கள் ஆக்கப்பட்ட துரோக மற்றும் சோக வரலாற்றையும் அவர் பிரித்தானிய தரப்பிற்கு எடுத்துரைத்தார்.

“நன்றிகெட்டத்தனமாக 1948ல் எமது மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. நமது மக்கள் பலவந்தமாக 1964ல் சிறிமா-சாஸ்திரி இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் நாடு கடத்தப்பட்டார்கள். இது நடக்கும் போது, சிலோன் என்ற இலங்கை ஒரு பிரிட்டீஷ் ஆதிக்க நாடாக இருந்தது. 1972ல் குடியரசு ஆகும் வரை, இலங்கையில் பிரித்தானிய அரசாட்சிக்கு பதில் சொல்லும் மகாதேசாதிபதியே ஆட்சியில் இருந்தார். 1948ன் சோல்பரி அரசமைப்பின் 29ம் பிரிவும் எம்மை காப்பாற்றவில்லை. ஆகவே இன்றைய பிரிட்டீஷ் அரசரின் அரசாங்கம் இலங்கை மலையக தமிழரின் மீது பாரிய தார்மீக பொறுப்பையும், கடமையும் கொண்டுள்ளது”.

நாட்டில் சமூக - பொருளாதார ரீதியாக மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில், அன்றாடாம் வாழ்வாதாரப் பிரச்சனைகளுடன் போராடும் மலையக மக்களை இந்தியாவும் பிரிட்டனும் கைவிடக் கூடாது என்றும் மனோ கணேசன் காத்திரமாக கோரினார்.



“இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் எமது பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை முழுமையாக விட்டுவிட வேண்டாம். அது சரி வராது. இந்தியா ஏற்கனவே, இலங்கையுடனான தமது நட்புறவை எமது விஷயத்திலும் அவ்வப்போது பயன்படுத்துகிறது. ஆனால், அது எமக்கு போதாது. அவர்களுக்கு அவர்களது சொந்த தேசிய கரிசனைகள் அநேகம் உள்ளன. அவை எமது விஷயங்களை விட முன்னுரிமை கொண்டவை. எமக்கு அவை தெரியும்”.

மலையக மக்கள் இலங்கையின் மையநீரோட்ட கட்டமைப்பில் இன்னும் உள்வாங்கப்படவில்லை என்பதையும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் பிரித்தானியக் குழுவிடம் தெரிவித்தார்.

“தேசிய நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத காரணத்தால், நாம் ஒதுக்கப்படுகிறோம். எமக்கு பிரிட்டீஷ் உதவியும் தேவை. பிரிபடாத ஒரே இலங்கைக்குள் எமது சமூக-அரசியல் அபிலாஷைகளை அடையவும், கடந்த காலங்களில் இழந்த உரிமைகளை பெறவும் நாம் பாடுபடுகிறோம். எமது மக்கள் ஜனதொகையில் மூன்றிலொன்றுக்கு குறைவில்லாத பிரிவினர் இன்னமும் பெருந்தோட்டங்களில் வாழ்கின்றனர். ஒட்டுமொத்த இலங்கையில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினராக அவர்கள் இருக்கின்றார்கள். ஐநா மனித உரிமை ஆணையகத்தின் நவீன கொத்தடிமை தொடர்பிலான விசேட அறிக்கையாளர், ஐநா நிறுவனங்கள், உலக வங்கி, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஆகியவை முன்வைத்துள்ள கணிப்பீடுகளின்படி, இந்த துன்பகரமான உண்மைகள் உலகறிய செய்யப்பட்டுள்ளன. ஆகவே பிரிட்டீஷ் அரசு, விசேட ஒதுக்கீட்டு திட்டங்களின் அடிப்படையில் பெருந்தோட்ட மக்களுக்கு உதவிட வேண்டும்”.

மலையக மக்கள் இலங்கையில் சமூக பொருளாதார ரீதியில் முழுமையான பிரசைகள் ஆக பிரித்தானிய உதவ வேண்டும் என்று கோரிய மனோ கணேசன், அவர்கள் இலங்கைக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் போது, நாட்டில் மிகவும் பின்தங்கிய நலிந்த பிரிவினரான, பெருந்தோட்ட பாமர மக்களுக்கு அவை கிடைகின்றனவா என்பதை உறுதி செய்துகொள்ளும் வகையில் கேள்வி எழுப்ப வேண்டும் எனவும் கோரினார். அதுமட்டுமின்றி இந்திய வம்சாவளி மக்களிற்காக இலங்கை அரசுடன் அவர்கள் பேச வேண்டும் எனவும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் வலியுறுத்தினார்.

“நாம் இல்லாமல் இலங்கை முழுமையடையாது என்பது இனிமேல் மனதில் கொள்ளுங்கள்”.

# கச்சதீவிற்கு பி.ஜே.பியினர் வர அனுமதி மறுப்பு

**- எமது யாழ் செய்தியாளர்**

தமிழகத்தில் இருந்து கச்சதீவு வருகைதரவிருந்த பக்தர்களுடன் விண்ணப்பித்த 8 பி.ஜே.பி உறுப்பினர்களிற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கச்சதீவு புனித அந்தோணியார் உற்சவமானது வியாழன் (03 ஆம் திகதி) ஆரம்பித்து வெல்லிவரை இடம்பெறவுள்ளது. இதற்காக தமிழகம் இராமேஸ்வரத்தில் இருந்து வியாழனன்று 71 படகுகளில் வருகைதர 2 ஆயிரத்து 408 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவ்வாறு விண்ணப்பித்த 2 ஆயிரத்து 408 பேரில் 6 பேர் கடத்தல் குற்றவியலுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அனுமதி மறுக்கப்பட்ட அதே நேரம் மேலும் 8 பேர் பி.ஜே.பி அமைப்புக்களை சேர்ந்தவர்கள் என்பதனால் அரசியல் சார்பு அமைப்பாக கருதி அவர்களிற்கான அனுமதியும் தமிழக அரசால் மறுக்கப்பட்டுள்ளது.

அனுமதி மறுக்கப்பட்ட விடயம் இந்தியாவின் மத்தியில் ஆட்சி செய்யும் பி.ஜே.பியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதேநேரம் கச்சதீவு புனித அந்தோணியார் திருவிழாவில் இந்தியா - இலங்கை இரு நாட்டுப் பக்தர்களும் கலந்துகொள்வதனால் இவர்களில் உள்ள மீனவர்களும் தமது பிரச்சணை தொடர்பிலும் சந்தித்து பேச்சு நடத்துவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இடம்பெறும் ஆலய உற்சவத்தில் மீனவர்கள் பேச்சுவார்த்தை என்னும் போர்வையில் இரு நாட்டு அரசியல் தரப்பினரே பேச்சில் ஈடுபடவுள்ளதனால் இவ்வாறு இடம்பெற ஏற்பாடு செய்யப்படும் பேச்சிற்கு ஆயர்கள் அனுமதிக்ககூடாது என வடக்கு மாகாணத்தின் பல மீனவ அமைப்புக்கள் கோரிக்கை விட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்களின் வருகையை தடுக்க தொண்டர் அணி: டக்ளஸ்



இந்திய-இலங்கை மீனவர்கள் பிரச்சனை “எத்தை தின்னால் பித்தம் தெளியும்” என்கிற வகையில் பல தசாப்தங்களாக தீர்க்கப்படாமல் இருக்கும் நிலையில், புதிய கருத்து ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது,

எல்லைதாண்டிய மீன்பிடித் தொழில் செய்வோரைக் கட்டுப்படுத்த கடற்தொழிற் திணைக்களத்திற்குத் துணையாகத் தொண்டர் அணியை உருவாக்குது தொடர்பில் இன்று கலந்துரையாடப்பட்டதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாய்த்த கூட்டம் வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் “இலங்கை, இந்தியா கடற்தொழிலாளர்களுக்கிடையிலான பிரச்சினை தொடர் கதையாகக் காணப்படுகையில் இரு தரப்பிலும் தீர்வு காணப்பட வேண்டிய தேவை உள்ளது. தொடர்ச்சியாக இராஜதந்திர ரீதியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றாலும் தீரந்தபாடில்லை”.



இலங்கை கடல் எல்லையை தொடர்ச்சியாக தீவிரமாக கண்காணித்து வருவதாக கடற்படை கூறிவரும் நிலையில் இப்படியான தொண்டர் அணி என்பது எந்தளவிற்கு பயனளிக்கும் என்று கேள்விகள் எழுந்துள்ளன.

கச்சத்தீவு அன்ந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்தில் பங்குபெற இந்திய மீனவர்கள் அங்கு வந்துள்ள நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்து வந்துள்ளது.

அது மட்டுமின்றி சட்ட அங்கீகாரமற்ற தொண்டர் அணி எப்படி எல்லை தாண்டும் மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்தும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்தியாவுடன் ஆக்கபூர்வமாக பேச்சுவார்த்தை நடத்தி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைவதை தடுக்க அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர, இப்படியான தொண்டர் அணி என்பது அறிவார்ந்த செயல் அல்ல என்று மீனவர்கள் தரப்பு கூறுகிறது.

# சிங்கள இராணுவத்தினர் உண்மையை மறைக்க வெட்கக்கேடான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்!

- கனடா நக்கீரன்

"நீதிதேவதையின் சக்கரங்கள் மெதுவாகச் சுழல்கின்றன, ஆனால் நன்றாக அரைக்கின்றன" என்ற மேற்கோள் இராணுவ மூலோபாயத்தின் செல்வாக்கு மிக்க படைப்பான "போர்க் கலை" (**The Art of War**) என்ற நூலின் ஆசிரியரான சுன் சு (கிமு 544 - கிமு 496) க்கு உரியது. ஆனால் சிறிலங்காவைப் பொறுத்தளவில் இந்த மேற்கோளை முழுமையாக நம்பக் கூடாது.

காரணம் அது உண்மையாக இருக்க வாய்ப்பில்லை. நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் பல மாதங்கள் அல்லது ஆண்டுக்கணக்கில் இழுத்தடிக்கப்படுகின்றன. நீதிமன்றங்கள் மிக எளிதாக ஒத்திவைப்புகளை வழங்குகின்றன. விசாரணை நடந்ததோ இல்லையோ வழக்கறிஞர்கள் அந்த நாளில் நீதிமன்றத்தில் தோன்றியதற்காக தங்கள் கட்டணத்தை அறவிட்டுவிடுகிறார்கள்.

2013 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை 10 ஆண்டுகள் கழித்து கடந்த மாதந்தான் ஒரு முடிவுக்கு வந்துள்ளன. பெப்ரவரி 23, 2023 அன்று பொன்னம்பலம் கந்தசாமி, சின்னத்துரை சசிதரன் (எழிலன்) மற்றும் உருத்தமூர்த்தி கிருஷ்ணகுமார் (கொலம்பஸ்) ஆகியோர் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் மீது ஒரு இடைக் காலத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இவர்கள் அனைவரும் மே 18, 2009 அன்று சக போராளிகளுடன் சேர்ந்து இராணுவத்திடம் சரணடைந்த இரண்டாம் நிலை விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆவர்.

வவுனியா உயர் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் இராணுவத்திடம் சரணடைந்த காணாமல் போனவர்கள் இராணுவத்தினரின் வசம் இருந்தபோது காணாமல் போயுள்ளனர் என்பதற்கு போதிய சான்றுகள் இருப்பதாக திருப்தி தெரிவித்தார். . இந்த வழக்கு இந்த மாதம் (மார்ச்) 22, 2023 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அப்போது இராணுவத்திடம் சரணடைந்த மூவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த வேண்டும், அப்படிக் கொண்டுவர முடியாவிட்டால் அதற்கான காரணங்கள்சொல்லப்பட வேண்டும்.



கடந்த ஆண்டு நொவெம்பரில் இந்த வழக்குகள் விசாரணைக்கு வந்தபோது, காணாமல் போனவர்களின் உறவினர்கள், போரின் முடிவில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த தங்கள் அன்புக்குரியவர்களுக்கு தாங்களே **"கூட்டு சாட்சிகள்"** என்று கூறியதுடன், இராணுவம் எப்படி மறுக்க முடியும் என்றும் வினவினார்கள்.

**"**போரின் முடிவில் எங்கள் உறவினர்களும் நண்பர்களும் சரணடைந்ததை நாங்கள் நேரில் பார்த்தவர்கள். ஒருவர் இருவர் அல்ல பலர் கூட்டுச் சாட்சிகள். என் மகன் சரணடையும் போது நான் அவனைப் பார்த்தேன், என் அருகில் இருந்த தாயும் அவரைப் பார்த்தார். இதேபோல், அவரது மகனும் சரணடைந்ததை நானும் பார்த்தேன். எனவே, நாங்கள் கூட்டுச் சாட்சிகள். இது ஒரு நபரைப் பற்றியது மட்டும் என்றால், அது பொய் என்று கருதலாம், ஆனால் நாங்கள் கூட்டுச் சாட்சிகள் மற்றும் இது பல நபர்களைப் பற்றியது. அதை அவர்கள் எப்படி மறுக்க முடியும்?**"** என மனுதாரர்கள் கேட்கிறார்கள்.

வடமாகாண சபையின் முன்னாள் மகளிர் விவகாரங்கள் மற்றும் மறுவாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் தனது கணவர் எழிலன் விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களுடன் சென்று இராணுவத்திடம் சரணடைந்தார்கள் என **The Morning** செய்தித் தாளுக்கு செவ்வி கொடுத்துள்ளார். **"**அண்மையில், அமைச்சர்கள் உட்பட பல அரசாங்கப் பிரதிநிதிகள் போரின் முடிவில் பாதுகாப்புப் படைகளிடம் சரணடைந்ததற்கு எந்தச் சான்றுமும் இல்லை என்று குறிப்பிட்டனர். நான் வவுனியா உயர்நீதிமன்றத்தில் **(Vavuniya High Court)** டிசெம்பர் 2012 இல் ஒரு ஆட்கொணர்வு மனுவைத் **(writ of habeas corpus)** தாக்கல் செய்தேன். எனது கணவரை இராணுவத்திடம் ஒப்படைத்தேன். நான் மட்டுமல்ல, பலரும் தங்கள் அன்புக்குரியவர்களை ஒப்படைத்தனர். இவர்களைப் பற்றி எந்தச் சான்றும் இல்லை என்று எப்படி அவர்கள் (இராணுவம்) கூற முடியும்? தனது கணவர் எழிலன் மற்ற மூத்த விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் சரணடையச் சென்றபோது, அவருக்குப் பின்னால் நானும் மூன்று குழந்தைகளும் பின்னால் நடந்து சென்றேன்**"** என்கிறார் அனந்தி.

2009 ஆம் ஆண்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் **(ICRC),** இலங்கை மனித உரிமைகள் ஆணையம் **(HRCSL),** கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு **(LLRC),** யஸ்மின் சூகா **(Yasmin Zooka)** தலைமையிலான ஐக்கிய நாடுகள் சபையின் குழு மற்றும் பரனகம ஆணைக்குழு ஆகியவற்றில் தனது கணவர் சரணடைந்தமை தொடர்பாக முறைப்பாடு செய்திருப்பதாக அனந்தி சசிதரன் கூறுகிறார்.

**"**நாங்கள் உண்மையைச் சொல்கிறோம். போரின் முடிவில் நாங்கள் எங்கள் அன்புக்குரியவர்களை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்தோம். அரசாங்கத்தை பிரபலமற்றதாக்கச் செய்ய நாங்கள் முயற்சிக்கவில்லை**"** என்கிறார்.

**"**யுத்தம் முடிவடைந்த கடைசி சில நாட்களில் 3,000க்கும் அதிகமானோர் சரணடைந்ததற்கான ஆதாரங்கள் இருப்பதாக அரசாங்கக் குழுவான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு **(LLRC)** அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சரியான எண்ணிக்கை அல்ல. ஆனால் அதைத்தான் அந்த அமைப்பு கூறுகிறது**"** என **The Morning** செய்தித் தாளுக்கு கொடுத்த நேர்காணலில் சனாதிபதி வழக்கறிஞர் எம்.ஏ சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

18 மே,2009 அன்று வி.புலிகள் தங்கள் ஆயுதங்களை மௌனித்துவிட்டதாக அறிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து சிங்கள இராணுவம் பொதுமக்களையும் வி.புலிப் போராளிகளையும் சரணடையுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்துக் கொண்டிருந்தது. இதனை அடுத்து வி.புலிகளது இரண்டாம் நிலை தளபதிகள் மற்றும் போராளிகள் வட்டுவாகலில் இராணுவ தளபதி சவேந்திரா சில்வா அவர்களின் தலைமையில் இருந்த 57 ஆவது படைப் பிரிவிடம் சரணடைந்தார்கள். சரணடைந்தவர்களை விசாரிக்கப் போவதாகக் கூறி இலங்கைப் போக்குவரத்துக்குச் சொந்தமான பேருந்துகளில் இராணுவ அதிகாரிகள் (சிப்பாய்கள் அல்ல) அழைத்துச் சென்றனர். இதில் சிலர் தங்களது மனைவி பிள்ளைகளோடு சென்றனர். வி. புலிப் போராளிகளை அழைத்துச் சென்ற ஒரு பேருந்துவில் அருட்தந்தை பிரான்சிஸ் யோசேப் அவர்களும் சென்றார். பின்னர் அவரும் திரும்பவில்லை.

இப்படி வி.புலிகள் போராளிகளை இராணுவ அதிகாரிகள் அழைத்துச் சென்றதை அவர்களது மனைவி, தாய்மார் - ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்த மனுதாரர்கள் உட்பட - கண்ணால் கண்டுள்ளனர். இப்படி அழைத்துச் சென்றவர்களில் வே. பாலகுமார் மற்றும் அவரது மகன் இருவரது நிழற்படத்தை மட்டும் லங்கா கார்டியன் **(Lanka Guardian)** 03 ஒகஸ்ட், 06, 2009 இல் பிரசுரிந்திருந்தது. அவர்கள் இருவரும் இராணுவ முகாம் ஒன்றில் ஒரு மரத்தின் ஒரு வாங்கில் இருப்பதையும் பக்கத்தில் இராணுவ சிப்பாய்கள் நிற்பதையும் படம் காட்டியது. இந்தவொரு படத்தைவிட வேறு எந்தத் தடயங்களும் ஊடகங்களில் வெளிவரவில்லை.

இப்படிப் பலரது கண்முன்னே அழைத்துச் செல்லப்பட்ட வி.புலிப் போராளிகள் காணாமல் போயிருக்கிறார்கள். ஆனால் இராணுவம் வி.புலிகளில் யாரும் தங்களிடம் சரணடையவில்லை என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறது.

யூன் 12, 2009 அன்று, **Asian Tribune** வெளியிட்ட செய்தியில் **"**வி.புலிகளின் மூத்த தலைவர் வி. பாலகுமார் மற்றும் ஏழு முக்கிய வி. புலிகள் காவல்துறையினரின் வலைக்குள் உள்ளனர்**"** என செய்தி வெளியிட்டது. அவர்கள் யோகரத்னம் யோகி, பேபி சுப்பிரமணியன், லோரன்ஸ் திலகர், விடுதலைப் புலிகளின் அனைத்துலக செயலகத்தின் முன்னாள் தலைவர் இளம்பரிதி, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கரிகலன் மற்றும் மூன்று பேர் ஆவர்.

இது தொடர்பாக நீண்ட இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் - 3 ஆண்டுகள் கடந்த நிலையில் - கடந்த நொவெம்பர் மாதம் 3 ஆம் தேதி ஊடகவியலாளர் நிரோஸ்குமார் வழங்கிய முறைப்பாட்டை, தகவல் அறியும் உரிமை தொடர்பான ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. அப்போது காணொளி மூலம் தோன்றி சாட்சியமளித்த இராணுவ பிரிகேடியர் என்.கே. நாகாவத்த "யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் புலிகள் எவரும் இராணுவத்திடம் சரணடையவில்லை. அப்போது மக்கள் இடம்பெயர்ந்து இராணுவப் பகுதிக்கு வந்தார்கள்.அவர்களில் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் இருந்தார்களா என எமக்குத் தெரியாது. எம்மிடம் வந்தவர்கள் தொடர்பில் நாங்கள் எந்தப் பதிவுகளையும் செய்யவில்லை. அவர்களை பேருந்துகளில் ஏற்றி - உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் தங்க வைக்கப்படும் முகாம்களுக்கு அனுப்பி வைத்தோம். அந்த முகாம்கள் புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. அங்கு சென்றவர்கள் தொடர்பான நடவடிக்கைகளை அந்தப் பணியகம்தான் மேற்கொண்டது. அவ்வாறான தகவல்களை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்திடம்தான் பெற்றுக் கொள்ள முடியும்**"** என்று கூறியதாக ஊடகவியலாளர் நிரோஸ் குமார் தெரிவிக்கிறார்.

சரணடைந்த வி.புலிப் போராளிகளை இராணுவ அதிகாரிகள் அழைத்துச் சென்றிருக்கிறார்கள் - அதற்கான கண்கண்ட சாட்சிகள் இருக்கின்றனர் - அவர்கள் திரும்பி வரவில்லை - காணாமல் போயுள்ளார்கள் என்றால் அவர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதுதான் பொருள். கேள்வி என்னவென்றால் அவர்களைக் கொல்லுமாறு கட்டளையிட்டவர்கள் யார், யார்?

யுத்தத்தின் கடைசி இரண்டு வாரம் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் மைத்திரிபால சிறிசேனா. பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் கோத்தாபய இராசபக்ச. இந்த இருவரும் அல்லது இந்த இருவரில் ஒருவர்தான் சரணடைந்த வி.புலிப் போராளிகளை கொல்லுமாறு கட்டளை பிறப்பித்திருக்க வேண்டும். வி.புலிகள் எந்தக் காலத்திலும் மீள் உருவாக்கம் பெறக் கூடாது என்ற வன்மம் இராசபக்சாக்களிடம் இருந்தது. இராணுவத்திடம் சரணடைந்த தலைவர் பிரபாகரனின் மகன் பாலசந்திரன் கொல்லப்பட்டதற்கும் இதுவே காரணமாகும்.

மேலே கூறியவாறு விசாரணையின் போது **"**சரணடைந்த வி.புலிகள் காணாமல் போய்விட்டனர் என்பதற்கு போதுமான சான்றுகள் இருப்பதாக நீதிமன்றம் திருப்தி அடைந்துள்ளது. எனவே இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்களை இராணுவம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும். முடியாத பட்சத்தில் அதற்கான காரணங்களை விளக்க வேண்டும்**"** என நீதிமன்றம் கூறியுள்ளது.

**"**பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்**"** என்கிறது திருக்குறள்.

**"**ஊழ்வினை உருத்து வந்து உறுத்தும்**"** என்கிறது சிலப்பதிகாரம்.

மார்ச் 22, 2023 அன்று நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு எப்படியிருக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.





# MONEY PROBLEMS?

## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS
CRPLAN

**0%வட்டி**

**அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்**

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்னது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

**தமிழில் தொடர்புகளுக்கு:**

**வசந்தி சிவராஜா - 416-616-3077**




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

## எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

**4 இடங்களில் சேவை**

றொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# சமூக – சமய மேம்பாடு குறித்து மக்கள் பிரதிநிதிகளுடன் பொது இயக்கங்கள் ஆலோசனை

## மலேசிய மனிதவள அமைச்சரிடம் இந்து சங்கம் கோரிக்கை



நக்கீரன்

**கோ**லாலம்பூர், பிப்.28:

மலேசிய இந்து சங்க தேசியப் பொறுப்பாளர்களுடன் மனிதவள அமைச்சர் வி.சிவக்குமாரை அவரின் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை பிப்ரவரி 27 மாலையில் மரியாதை நிமித்தம் சந்தித்ததாக தலைவர் "சிவநெறிச் செல்வர்" தங்க கணேசன் தெரிவித்தார்.





மலேசிய இந்திய சமுதாயம் காலங்காலமாக எதிர்நோக்கி இருக்கும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து ஆலோசிக்கவும் அவற்றுக்கு ஒற்றுமை அரசாங்கத்தின் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அனைத்து மக்கள் பிரதிகளும் அனைத்து இயக்கங்களின் பொறுப்பாளர்களும் இணைந்து மனித வள அமைச்சரின் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று இந்தச் சந்திப்பின்போது கோரிக்கை வைக்கப்பட்டது.

இந்து சங்க துணைத் தலைவர் கணைஷ் பாபு, உதவித் தலைவர் திருமதி. சாந்தா வேணுகோபால், துணைச் செயலாளர் அழகேந்திரன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

பிறப்பு பத்திரம் உள்ளிட்ட குடியுரிமை ஆவணங்கள், முடிவு காணப்படாத மதமாற்றச் சிக்கல், இந்து வழிபாட்டுத் தலங்கள் எதிர்நோக்கும் குருக்கள் - இசைக் கலைஞர்கள் பற்றாக்குறை, குடிநுழைவுத் துறையில் ஏற்படும் தடங்கல், மாணவர் எண்ணிக்கைச் சரிவால் தமிழ்ப் பள்ளிகளின் எதிர்காலம் குறித்த கேள்விக்குறி, இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் வகுப்புகள் எதிர்நோக்கும் சிக்கல், சிறார் பாதுகாப்பு மையங்களில் நடைபெறும் மதமாற்றத்தை தடுக்கும் வகையில் இந்து சங்கமே அத்தகைய மையங்களை நடத்துவதற்கான அனுமதி, குருகுலவாச முறையில் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிக்கான அனுமதி குறித்தெல்லாம் அமைச்சரிடம் ஆலோசிக்கப்பட்டது.

குறிப்பாக, நாட்டில் சுமார் 2,500 இந்து ஆலயங்கள் முறையாக பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவற்றின் வளர்ச்சிக்காக ஒற்றுமை அரசாங்கத்தின் ஒத்துழைப்பு குறித்தும் எடுத்துரைக்கப்பட்டதாக தங்க கணேசன் மேலும் சொன்னார்.

சிறைச்சாலைகளில் உள்ள இந்தியக் கைதிகளுக்கு சமய போதனை மேற்கொள்வது குறித்தும் மலேசிய இந்து சங்கம் தனது சமய-சமுதாய நடவடிக்கைக்கான அரச மானியம் குறித்தெல்லாம் தலைவர் தங்க கணேசன் எடுத்துக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**நக்கீரன் -** Nakkeeran 013-244 36 24

# "மன்னர் சார்ல்ஸ்" தனது முடிசூட்டு விழாவின் மூலம் 900 ஆண்டுகால பாரம்பரியங்களை உடைக்கவுள்ளார்!



ஐக்கிய ராச்சியத்தில் நடைபெறவிருக்கும், மன்னர் "சார்ல்"ஸின் (King Charles) முடிசூட்டு விழாவின் போது, 900 ஆண்டுகால பழமையான அரச பாரம்பரியங்கள் சிலவற்றை, மன்னர் முதல் முறையாக உடைக்கவுள்ளதாக அரச தகவல் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

சார்லஸ் III ஐக்கிய ராச்சியத்தின் மன்னரும், "கொமன்வெல்த்" 14 நாடுகளின் தலைவருமாவார். அவர் "வேல்"ஸின் (Wales) மிக நீண்ட கால வாரிசு மற்றும் இளவரசர் ஆவார்.

இவர் தனது 73 ஆவது வயதில், 2022 செப்டம்பர் 8ஆம் திகதியன்று அவரது தாயார் இரண்டாம் எலிசபெத் ராணி இறந்த பின், பிரித்தானிய சிம்மாசனத்தின் உரிமையுள்ள மன்னரானார்.

இவ்வகையில், மே 6, 2023 அன்று நடைபெறவிருக்கும் தனது முடிசூட்டு நிகழ்வினை, பாரம்பரியங்களில் சில மாற்றங்களுடன் செய்வதற்கான ஒழுங்குகளை மன்னர் சார்ல்ஸ் மேற்கொண்டு வருகிறார்.

"டெய்லி ஸ்டா"ரின் (Daily Star) கூற்றுப்படி, 1953 இல் அவரது தாயார் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக, 8300 பேர் அழைக்கப்பட்டிருந்த அதே வேளை, மன்னர் சார்ல்ஸ் தனது முடிசூட்டு நிகழ்விற்கான விருந்தினர் எண்ணிக்கையை வெறும் 2000 ஆக குறைக்கவுள்ளார்! இது, "முடியாட்சியின் புதிய சகாப்த"த்தை நோக்கிய ஒரு முக்கிய படியைக் குறிக்கிறது!

விருந்தினர் பட்டியல் அளவின் பாரிய மாற்றமானது, 900 ஆண்டுகள் பழமையான பாரம்பரியத்தை உடைக்கும் தன்மையை முழுமையாகக் கொண்டுள்ளது.

இருப்பினும், மன்னர் சார்ல்ஸ் வெளிநாட்டு மன்னர்களை முடிசூட்டு விழாவிற்கு அழைப்பதில் மாற்றமிருக்காது என கூறப்படுகிறது. ஜோர்டான் மற்றும் ஸ்கன்டினேவிய அரச குடும்பங்களுக்கு அழைப்பு விடுப்பார் என ஆதாரம் கூறுகின்றது.

"முடிசூட்டு விழா என்பது கடவுளுடன் ஒரு மன்னரின் தனிப்பட்ட நிகழ்வாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இவை விதிமுறைகளுடன் நிகழ்த்தப்படுவதாய் ஆரம்பிக்கப்பட்டன" என, அரச குடும்பங்களின் "தகவல் ஆதாரங்கள்", "டெய்லி மெயி"லிடம் (Daily Mail) கூறியுள்ளன.

அவர்கள் தொடர்ந்தனர், "ராணியின் முடிசூட்டு விழாவில் முடிசூட மன்னர்கள் இல்லை, டோங்கா ராணி (Queen of Tonga) போன்ற பாதுகாவலர் ஆட்சியாளர்கள் மட்டுமே இருந்தனர் இது பல நூற்றாண்டுகளாக ஒரு பாரம்பரியம்".

முன்னதாக, "டெய்லி ஸ்டார்" (Daily Star) ஊடகமும் சார்ல்ஸ் தனது நடவடிக்கைகளில் சில முக்கிய மாற்றங்களைச் செய்ய ஆர்வமாக இருப்பதாக அறிவித்திருந்தது.

கடந்த காலங்களில் முடிசூட்டு நிகழ்வுகளில் வழக்கிலிருந்த "தேதியிடப்படுதல்" என்ற பாரம்பரியமும் மன்னர் சார்ல்ஸ் இனால் நீக்கப்படுவதாக கூறப்படுகிறது.

"வேதம் புதுமை செய்" என, பாரதி, பழமையை புதுமையாய் செய்த வகையில் இதனைக்காணலாமா? இல்லை, "மாற்றமொன்றே மாறாதது" என, உலக இயக்கத்தின் உண்மை இயல்பு என்றவாறு இதனை நோக்கலாமா? எதுவாயினும் ஆளுகைகளில், மெதுமெதுவாய் இந்த மரபுகள் மாற்றம் பெறுதலும் வரவேற்கத்தக்கதே!

**- பானு சுதாஹ்ரன்**

# கடந்தவையும் கடப்பவையும் (48)

அங்கு, விரிந்து பரந்த நீலக்கடல் - மேல்
தெளிந்த ஆகாயச் சூரியனும் - தன்

பரந்த ஒளியினைப் பரப்புவதால் - கடல்
அசைந்து மின்னும் வடிவழகில் - மனம்

கலந்து மகிழ்ந்தது அவ்வேளை - எனினும்
மிகுந்த விசையொடு பெரும்அலைகள்

பொங்கி வந்த கடலினிலே - அன்று
எங்கோ ஓரிரு சிறு அலைகள் - நன்றே

தள்ளும் வேகம் தான்இன்றி - தூர
மெள்ள அவை நுரைப்பதுவும் - பின்

அங்கே அவை தெளிவதுவும் - அன்றைய
வெம்மையை அறியவும் தந்தது - சிலவிடத்து

எம்மவர் நிலையையும் வெளிப்படுத்த
நல்லதோர் குறியீடாயும் இருந்தது

மெள்ள மெள்ள நேரமது நகர
கொள்ளை அழகு வானிலே தெரிய

ஆகா! என்ன இன்பம்!

வெள்ளிபோல் தெறித்த சூரியன்
மெள்ளமாய் பழுக்கிறான் செண்ணிறமாய்

மெல்லிய நீலநிற வானமகள் - எங்கு
அள்ளி உடுத்தினாளோ கருநீல ஆடை? -
அதுவரை

புள்ளியாய்த் தெரிந்த வெண்முகில்கள்
துல்லியமாயின வான மேடையிலே - அங்குசில

புலிகளாய் வந்தன நீ நின்றால்
வருவேன் நானுமென கூடவே

சிங்கங்களும் வந்தன அவற்றுடனே - அ
சிங்கப் பட்டாலும் நானும்தான் வருவேனென
நரிகளும் தான்

சாதுரியமாய், ஆட்டக்களத்தில் சகுனியைப்
போலே - அன்று
வானில் கூட எத்தனை வரலாறு - எம்

மனத்திற்கு ஏற்ப முகில்களுமே
கணத்துக்குக் கணம் காட்சியை மாற்றின

மாறுவது முகிலா மனமா என
ஆராய்ந்தது மூளை, இருந்ததனால் - நேர-
மாக

அழகுச் சூரியன் பெரிதானான் - தூரவிருந்த
தொடமுடியாக் காதலியைத் தொடுவதற்கு

ஆசையோடு விரைந்து போகும் காதலன்போல்
நாணத்தால் செக்கச் செவேல் எனவே
சிவந்தபடி - மிக

பக்கத்தில் போகவே காத்திருக்க கடலவளோ
- அவன்
தூரத்தில் இருந்த போதே நாணினாள்
நெளிந்தாள் - பின்

முழுவதுமாய் சிவந்தாள் தானும்தான் - எந்த
நாளுமே இருவருமே இப்படியாம்

தூரத்துப் பார்வைக்குத் தொடுவானமாய்
கிட்டத்துப் பார்வைக்கு வெகு தூரமாய்...

(தொடரும்)

-- உமா மோகன் --
Montreal- Canada




குருவடி சரணம் ஓம் சக்தி திருவடி சரணம்

## மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில்

# மலரும் நினைவுகள்

**80, Nashdene Rd, Unit #99. Scarborough, Ontario**
**(416) 436-9647**

------------------------

06-03-2023 காலை
**மாசி மகம் பருவ புஜை நடைபெறும்.**

03-03-2023 வெள்ளிக்கிழமை அன்று மாலை சிறப்பு பூஜையுடன் 05-03-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பங்காரு அடிகளாரின் 83வது பிறந்ததினத்தை முன்னிட்டு சிறப்பு பூஜை தரிசனம்.

அனைத்து சக்திகளும் அன்னையின் அருளைப்பெற்றுய்யுமாறும் வேண்டப்படுகின்றது.

அத்துடன் தேசிக்காய், வேப்பிலை, பூக்கள் அன்புடன் அன்னைக்கு சமர்ப்பிக்கலாம். வேண்டுவோர்க்கு வேண்டியதைக் கொடுக்கும் கருணை உள்ளம் கொண்ட அன்னை ஆதிபராசக்தி அருள் என்றும் கிடைக்க வேண்டிக்கொள்வோம்.

பஜனை, பேச்சு, நடனம், பாட்டு கச்சரி ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## AMMA BHAGAWAN'S 74th Birthday Celebrations and Peak State Transfer

## அம்மா பகவான் அவர்களின் 74வது பிறந்த நாள் வைபவமும் அதி உச்ச முத்திநிலை பரிமாற்றமும்



**MALVERN COMMUNITY CENTRE**
30 Sewells Road
Scarborough, ON M1B3G5

**March 12th, 2023**
3:30 PM to 6:00 PM

**We kindly welcome your presence and get grace from Amma Bhagavan**

Contact:
Sevaks: (416) 669-6074 | (905) 940-4767 | (416) 638-0687

# சீற்றம் சீரழிக்குமா.? திருவள்ளுவர் கூறுவதென்ன.?

திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)
வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா
நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்
Jothy.thirukural@gmail.com



வரலாற்றுச் சிறப்புகள் மிக்க உயர்தனிச் செம்மொழி எங்கள் தமிழ்மொழி. இவ்வுலகிலே மேன்மைமிகு செவ்விலக்கியச் செல்வங்களைக் கொண்ட மொழியாக எமது மொழி திகழ்கிறது. தமிழ்மொழி செம்மொழித் தகுதி பெறுவதற்குத் தெய்வப்புலவர் தந்தருளிய திருக்குறளும் மிகப் பிரதான காரணமாகிறது. வெண்பாவகையிற் படைக்கப்பட்ட திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பாலென முப்பாலாகப் பிரிக்கப்பட்டு, 1330 அருங்குறள்களைத் தன்னகத்தே தாங்கியிருக்கிறது. இன, மத பேதங்கள் கடந்து உலகோர் அனைவருக்கும் ஏற்றவகையிலான பொதுவான நல்லறங்களை எடுத்துக் கூறியமையே இந்நூலுக்கான உயர்தனிச் சிறப்பாகும். வாழ்வியலின் அத்தனை பக்கங்களையும் மிகச் சிறப்பாக இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

**“எல்லாப்பொருளும் இதன்பால் உள இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையாம்”**

என்று திருக்குறளின் பெருமையினை மதுரைத் தமிழ் நாகனார் கூறியதனைத் திருவள்ளுவமாலை என்ற நூலிற் பார்க்கின்றோம். பல இலக்கிய உத்திகளையும் கையாண்டு தான் கூறவந்த அறநெறிகளை மிகச் சிறப்பாகத் திருவள்ளுவர் திருக்குறளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**அறம் என்றால் என்ன** என்பதற்குத் திருவள்ளுவப் பேராசான் தருகின்ற விளக்கம் என்ன.?

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.**

(குறள் 35)

பொறாமை, பேராசை, கடுஞ்சீற்றம், தகாத வார்த்தைகள் என்ற இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் நாம் வாழவேண்டும். அதுவே அறமாகும் என்பதனைத் தெய்வப்புலவர் அறிவுறுத்துகிறார். இந்த நான்கும் உயிர்கொல்லிகள் என்பதனையும் திருவள்ளுவம் வலியுறுத்துகிறது. இவற்றுள் வெகுளி எனப்படும் சீற்றங் குறித்துத் திருவள்ளுவர் கூறியவற்றை இக் கட்டுரை தொகுத்து நோக்குகிறது.

அறத்துப்பாலில் முப்பத்தோராவது அதிகாரமாக வெகுளாமை வைக்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரத்தில் திருவள்ளுவர் கோபம் கொள்ளாதிருக்க வேண்டுமென்றும், எங்கெல்லாம் கோபம் கொள்ளக்கூடாதென்றும், கோபம் கொள்வதனால் எத்தகைய தீமைகள் விளையும் என்பதனையும், கோபம் கொள்ளாமையினால் எத்தகைய நன்மைகள் ஏற்படுமென்பதனையும் சிறப்பாக விளங்க வைத்துள்ளார்.

கோபம் என்பது மிகவும் சக்திவாய்ந்த உணர்ச்சியாகும். இன்றைய அவசர உலகில் கோபம் பலரையும் ஆட்கொள்கிறது. நியாயமற்ற வகையில் நமக்கு ஏற்படும் கோபம் ஆபத்தானது, அது அறவழியற்றது. ஒருவரது பொறாமைக் குணம், தவறான புரிதல், பேராசை, அதீத எதிர்பார்ப்புகள், பொறுமையின்மை, இரக்கமின்மை, தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமின்மை, அதனாலான விரக்தி, மனஅழுத்தம் போன்ற பல காரணங்களால் ஆரோக்கியமற்ற கோபம் ஏற்படுவதைப் பலரிடமும் அவதானிக்க முடிகிறது.

கோபத்தைத் தவிர்த்து வாழ்வதனைத் திருவள்ளுவர் தனிமனித அறமாகக் கூறுகிறார். எங்கள் முக மலர்ச்சியையும், மன மகிழ்ச்சியையும் கொன்றொழிக்கவல்ல பகை சினத்தைத் தவிர வேறேதும் இல்லையென்பதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் குறளால் விளக்குகிறார்.

**நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.**

(குறள் 304)

கோபத்தில் எடுக்கப்படும் பெரும்பாலான முடிவுகள் நன்மைகளைத் தரவல்லன அல்ல. ஆகவே எந்த இடத்திலும் நாம் பலதடவைகள் நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். ஏனெனில் சினமானது எமது அறிவை மறைக்கக்கூடியது. இதனாலேயே “ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்” என்றனர் பெரியவர்கள். மற்றவர்களிடம் வன்முறையாக நடந்துகொள்ளுதல், வன்சொற்களைப் பயன்படுத்துதல், சூழ்ச்சி செய்தல், துன்பப்படுத்துதல் போன்றனயாவும் கோபத்தின் விளைவுகளே. இச்செயற்பாடுகள் எமது மனிதத் தன்மையினை இழக்கச் செய்கின்றன. குடும்பங்களை, நட்பை, உறவுகளை, உயர்வுகளை, எமக்குண்டான பெருமைகளையெல்லாம் அழித்தொழிக்கக் கூடியது இந்தக் கோபம். எமக்கேற்படும் தகாத கோபமானது எம்மை மட்டுமல்ல எம்மைச் சூழவுள்ள பலரையும் தாக்கவல்லது என்பதனைப் பின்வருமாறு திருவள்ளுவம் அறிவுறுத்துகிறது.

**சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.**

(குறள் 306)

சீற்றமானது உடல், உளத் தாக்கங்களைத் தரவல்லது. நாம் அதிக கோபம் கொள்கின்றபொழுது எமது இரத்த அழுத்தம் உயர்கின்றது. இதனால் மாரடைப்புக்கூட வரலாமென்கிறது மருத்துவம். இவைமட்டுமல்ல சில சந்தர்ப்பங்களில் உயிரை மாய்த்துக் கொள்ளுமளவிற்குக் கோழைத்தனமான முடிவுகளை எடுக்கத் தூண்டுகிறது. ஆகவே நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமாயின் கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும், இல்லையெனில் அக் கோபமானது நம்மையே கொல்லும் தன்மையது என்கிறார் திருவள்ளுவர்.

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.**

(குறள் 305)

அதிக கோபத்திற்கு நாம் ஆட்படும்போது எமது கடமைகளைச் சரியாகச் செய்ய முடியாதளவிற்குப் பதட்டத்திற்கும், கவனச்சிதறலுக்கும் ஆளாகிவிடுவோம். இந்நிலை எமது முன்னேற்றங்களுக்கெல்லாம் தடைக்கல்லாக அமைந்துவிடும். சினம் அளவுகடந்து செல்லும்போது அதனைக் கட்டுப்படுத்தத் தெரியாதவர்களைத் திருவள்ளுவர் இறந்தவர்களுக்குச் சமமாக நோக்குகிறார். சினத்தை அடியோடு துறந்தவர்களை சாவை வென்றவர்கள் என்கிறார்.

**இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.**

(குறள் 310)

எனவே எமக்கு ஏற்படும் கோபமானது எம்மையே திருப்பித் தாக்கவல்லது. நிலத்தில் அடித்தவனின் கரங்கள் வலிக்கும் என்பதுபோல, கோபம் கொள்பவனும் அதனால் வரும் பாதகமான விளைவுகளைத் தானேதான் தாங்கியாக வேண்டுமென்கிறது திருக்குறள்.

**சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.**

(குறள் 307)

ஆகவே யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அவர்கள் செய்யும் குற்றங்களை நாம் மறந்துவிடுதல் எப்பொழுதும் பாதுகாப்பானது, இல்லையேல் தீமையான விளைவுகளையே அனுபவிக்க நேரிடும் என்கிறது திருக்குறள்.

**மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்**

(குறள் 303)

இன்னாசெய்யாமை என்ற அதிகாரத்தில் நமக்குத் தீமை செய்தவர்களுக்கும் அவர்கள் நாணும்படி நன்மை செய்து விடுவதே நமக்குச் சிறப்பாகுமெனக் கூறிய குறளையும் ஒப்பு நோக்கலாம். எமக்குத் தகாதவைகளைச் செய்பவர்களுக்கும் நாம் நன்மையே செய்யவேண்டும் என்ற திருவள்ளுவரின் மேன்மை மிகு சிந்தனை இங்கு நற்சிந்தனையாக அமைகிறது.

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.**

(குறள் 314)

வேகமான இந்த உலகிற் பலரும் பல நேரங்களிலும் சின்னஞ்சிறிய விடயங்களுக்கெல்லாம் அதிகம் சீற்றங் கொள்கிறார்கள். தம் கோபத்தை வார்த்தைகளாக விட்டுவிட்டுப் பின்பு கவலை கொள்கிறார்கள். இவ்வாறான இன்னாச்சொற்களை ஆயுள்முழுவதும் ஆறாத வடுவாகப் பார்க்கிறது திருக்குறள். எனவே தீயினாற் சுட்ட புண் ஆறத்தக்கதென்றும், நாவினாற் சுட்ட வடு ஒருபோதும் ஆறாதென்றும் பின்வரும் குறள்மூலம் எடுத்தியம்புகிறார்.

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.**

(குறள் 129)

நாங்கள் யாரிடம் சினம்கொள்ளலாம் என்கின்ற வினாவிற்குத் திருவள்ளுவம் கூறும் பதில் என்ன.?

எமது சீற்றம் பலிக்காத இடத்தில் எழுமாயின் அது ஆபத்துகளையே தரவல்லது. அதாவது நாம் நம்மைவிடப் பல வழிகளிலும் வலியவர்கள்மீது கோபம்கொள்வதனாற் கெடுதிகளையே சந்திக்க நேரிடும் என்கிறார்.. அதேபோல நம்மைவிட எளியவர்கள் மீது சீற்றங்கொள்வதும் தீமையானதே. அதனாற் பழி, பாவங்களுக்கு உள்ளாகுவோம் என்றும் திருவள்ளுவர் அறம் உரைக்கின்றார். மொத்தத்தில் எவரிடமும் சினங்கொள்ளா திருப்பதனையே திருவள்ளுவம் வலியுறுத்துகிறது.

**செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.**

(குறள் 302)

ஆனால் நீதியற்ற புறக்கணிப்புகளாலும், மற்றவர்களின் நடுநிலையற்ற தன்மைகளாலும், தன் திறமைகளுக்குச் சிறந்த அங்கீகாரம் கிடைக்காத போதெல்லாம் அநீதிகளைக் கண்டு அறச்சீற்றம் ஏற்படுகிறது. இவ்வாறான சில இடங்களில் எழுகின்ற சீற்றம் தவிர்க்கமுடியாததாகிறது. ஆரோக்கியமான கோபமானது பல அவலங்களிலிருந்து நம்மையும், ஏனையோரையும் காப்பாற்றக்கூடியது என்பதையும் மறுப்பதற்கில்லை.

எமது அநாவசியமான சீற்றத்தை நாம் அடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அதனை நாம் நிர்வகிக்கத் தவறினாற் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். நாம் எப்பேற்பட்ட விடயங்களுக்கெல்லாம் கோபங்கொள்கிறோம் என்று நம்மை நாமே கேள்வி கேட்பதன் மூலம் கோபம் ஏற்படும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதுவே புத்திசாலித்தனமுமாகும். இதனால் நாம் நமக்குத் தாக்கத்தைக் கொடுப்பதையோ, மற்றவர்களைத் தாக்குவதையோ தவிர்த்துக் கொள்ளலாம்.

எமது மனதிற்குப் பிடித்த நல்ல விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் மனதை அமைதிப்படுத்திக் கொள்ளலாம். மனதிற்கு மகிழ்வினைத் தரக்கூடிய நூல்களை வாசித்தல், பிடித்த நல்ல நண்பர்களோடு உரையாடுதல், பிடித்த பாடல்களைக் கேட்டல், நகைச்சுவை மிக்க திரைப்படங்களைப் பார்த்தல், கடந்தகால கசப்பான நினைவுகளை மறக்க முயற்சித்தல், மூச்சுப் பயிற்சி, உடற்பயிற்சி, யோகா போன்றவற்றைச் செய்வதன் மூலம் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

முரண்பாடுகள் ஏற்படும்பொழுது கௌரவமான முறையிற் தீர்வினைக் காணவேண்டும். வன்முறைகள் நம்மைச் சிறைவரை கொண்டுசெல்லும், இப்படியான சந்தர்ப்பங்களில் எமக்குத் துன்பங்கள் வராதபடி முன்னதாகவே காக்கத்தக்க பெரியோரின் ஆலோசனைகளையும் பெற்றுப் பின்பற்றுவது சிறப்பானதெனத் திருக்குறள் நமக்கு அறிவுரைக்கிறது.

**உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

(குறள் 442)

இந்தவகைகளில் நமக்குக் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் அதற்கேற்ற மருத்துவரை நாடுவதே பாதுகாப்பானது.

கோபத்தை நாம் கட்டுப்படுத்தத் தெரிந்தவர்களாக இருந்தால் நமக்குள் இரக்க குணமும், மற்றவர்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் உருவாகும். நமக்கான நல்ல நட்புவட்டம் அதிகரிப்பதோடு சமூகப் பிணைப்பும் சிறப்புறும். நிதானமான முடிவுகளை எடுக்கக்கூடிய திறன் அதிகரிக்கும். உடல், உள உபாதைகளிலிருந்து விடுபடவும் முடியும். மொத்தத்தில் சீற்றந் தவிர்த்தால் நினைத்த நன்மைகளையெல்லாம் ஒருவன் ஒருங்கே பெறுவானென்கிறது திருக்குறள்.

**உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.**

(குறள் 309)

ஆகவே சினம் தவிர்த்து, ஒற்றுமை பேணி, நலம்காத்து வளமாய் வாழ்வோம்.

**வாழ்க தமிழ்.!
வாழ்க திருவள்ளுவம்.!!**

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1038



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராாசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் மட்டக்களப்பு

"சித்தியும் சித்திதருந் தெய்வமாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் உள்ளே புரக்கும் புரத்தையன்றே."

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த சில சம்பவங்களும் செட்டிபாளையம் கண்ணகை அம்மன் ஆலயத்தைப்பற்றி அறிய உதவுகின்றன. ஓல்லாந்தர் காலத்திலே பசுக்கோல் முதலி என்பவன் மட்டக்களப்பிலுள்ள முக்குலத்து நிலமைகளைப்பற்றிக் கண்டியரசனான ஸ்ரீகீர்த்திசிறிராஜசிங்கனிடம் முறைப்பாடு செய்து இரு நிலமைகளைச் சிரச்சேதம் செய்வித்தான். இதன் பின்னர் தானே அதிபதி என எண்ணங்கொண்டு மனம்போனபோக்கிலே நடக்கலானான். நாப்புட்டிமுனையில் கிறிஸ்தவதேவாலயம் ஒன்றினையும் கட்டியதோடு அனைவரையும் பயமுறுத்தி லஞ்சம்பெற்றும் வந்தான். நாளடைவில் பசுக்கோல்முதலியின் சுயரூபம் வெளிப்பட, மன்னனால் இராச சேவையிலிருந்து நீக்கப்பட்டான்.

கி.பி 1747-1782 வரையான காலப்பகுதியில் ஸ்ரீ கீர்த்திசிறி ராஜசிங்கன் கண்டியின் அரசனாக இருந்தபோது மட்டக்களப்பின் பிரதேசங்களை வரையறை செய்ய எண்ணங்கொண்டான். இக்காலப்பகுதியில் மட்டக்களப்பின் கரையோரப்பகுதி ஒல்லாந்தர்வசம் இருந்தது. எனவே ஏனைய பகுதிகளை இரண்டாகப் பிரித்து தெற்குப்பகுதிக்குக் கந்தப்போடி என்பவரையும், வடக்குப் பகுதிக்கு அறுமக்குட்டி என்பவரையும் போடிகளாக நியமனம் செய்தான்.

மட்டக்களப்பின் வடபாகமாகவுள்ள எருவில், போரமுனைநாடு, மண்முனைநாடு, கோரளை என்னும் நான்கு கிராமங்களையும் அறுமக்குட்டிப் போடியும், தெற்கே உள்ள கரவாகு, சம்மாந்துறை, பாணகை, உன்னரசுகிரி என்னும் நான்கு பகுதிகளையும் கந்தப்போடியும் பரிபாலனம் செய்து வந்தனர். அறுமக்குட்டிப்போடி கல்வியிற் சிறந்தவர். பராக்கிரமசாலி. இவர் செட்டிபாளையத்தில் கண்ணகி அம்மனை இருத்தினார் என மட்டக்களப்பு மான்மியத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.

செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலயம் முறையாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை, ஆலயத்தின் கூட்டக்குறிப்புக்கள் தெளிவாக்கியுள்ளன. கோவில் கூட்டங்களுக்கு வன்னிமை தலைமை தாங்க, உடையார், விதானை, தோம்புதோர், வண்ணக்கர், வட்டைவிதானை, கிராமச்சங்க அக்கிராசனர், புலவர், வைத்தியர், சோதிடர், குருக்கள், முதலி, போடி ஆகியோருடன் பொதுமக்களும் சமூகங்கொடுத்துள்ளனர்.

ஏனைய ஆலயங்களில் நடைபெறும் விழாக்களிலிருந்து கண்ணகி அம்மன் ஆலய விழாக்கள் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படும். கண்ணகி அம்மனுக்குரிய பூசையினைச் சடங்கு என்று அழைப்பது மட்டக்களப்பு மரபாகக் காணப்படுகின்றது. தமிழர் தாயகப் பகுதிகளான யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மலையகப்பகுதிகளிலும் சடங்கு என்ற சொல், திருமணம், பூப்புநீராட்டுவிழா, மற்றும் மரணநிகழ்வுகளில் இடம்பெறும் நிகழ்வுகளைக் குறிக்கப் பயன்படும் சொற் பிரயோகமாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பிலே நடைபெறும் கண்ணகி அம்மன் கோயில் சடங்குகளில் பூசாரிமார் வேப்பிலை, மஞ்சள், கமுகம்பாளை, உடுக்கு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பர் இவ்வாறான சடங்குகள், செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயிலில் ஆரம்பத்தில் மூன்று சடங்குகளாக இடம்பெற்று, பின்னர் ஐந்தாக மாற்றம் பெற்றது. ஏழு கண்ணகி அம்மன் சிலைகள் கொண்டு வரப்பட்டமையை நினைவுகூர்ந்து, ஏழு சடங்காகப் பிற்காலத்திலே மாற்றம் பெற்றது. இச்சடங்குகள் இரவிலும், பகலிலும் நடைபெறும்.

வைகாசி மாதத்தில் பூரணையில்வரும் திங்கட்கிழமையன்று திருக்குளிர்த்தி இடம்பெறும்வகையில், வெள்ளிக்கிழமை கதவு திறக்கப்படும். "வருடம் ஒருமுறை வைகாசித்திங்களில் வருவேன்" எனக் கண்ணகி கூறியதற்கமைய, பூரணையை விட பூரணையை அண்மிய திங்கட்கிழமைக்கே இங்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஏழு சடங்குகளும் தனித்தனியே முக்கியத்துவமும் சிறப்பும் உடையனவாக விளங்குகின்றன. இவை தவிர கதவு திறத்தல், கலியாணச்சடங்கு, பூரணகும்பச்சடங்கு, பூரணகும்பத்துநெல், குளிர்த்திச் சடங்கு, குளிர்த்தி ஏடு படித்தல், எட்டாம் சடங்கு, சித்திரைச் சடங்கு, கார்த்திகை விளக்கீட்டுச்சடங்கு, தைக்குளிர்த்தி போன்றவையும் செட்டிபாளையம் கோயிலிலே சிறப்பாக நடைபெறும்.

பொதுவாக ஆலயங்களிலே நித்திய, நைமித்திய பூசைகள் இடம்பெறுவது வழக்கம். ஆனால் கண்ணகி அம்மன் கோயில்களில் நித்தியபூசை நடைபெறுவதில்லை, வருடம் முழுவதும் இக்கோயில்கள் பூட்டப்பட்டுக் காணப்படும். கண்ணகி கோயில்களிலே நடைபெறும் வருடாந்தச் சடங்கிற்காக வைகாசியில் கதவு திறக்கப்படுவதையே கதவு திறத்தல் என்னும் சடங்காகக் கொண்டாடுவர். கண்ணகி சடங்கின் ஆரம்பமே கதவுதிறத்தல் ஆகும். ஞாயிற்றுக்கிழமை பகலில் நடைபெறும் இச் சடங்கில், கோயிலின் நான்காம் மண்டபத்துள் இருக்கும் ஒரு தடிக்குச் சேலை கட்டிப் பெண்உருவமாக அமைப்பார்கள். இப்பெண் உருவத்தையே கண்ணகி அம்மனாகப் பாவனை செய்வர். இச்சடங்கிலன்று மூலத்தானத்துள் பதின்மூன்று கும்பங்கள் வைக்கப்படும். கலியாணக்காலுக்கு முன்பாக ஐந்து கும்பங்கள் ஞாயிற்றுக்கிழமை இரவுச் சடங்கிலே வைக்கப்படும். கலியாணக்காலின் முன்பு வைக்கப்படும் கும்பங்கள் நெற்குவியலின்மீதே நிறுத்தி வைக்கப்படுகின்றன. இதற்குச் சுமார் நான்கு புசல் நெல் தேவைப்படும். திங்கட்கிழமை பின்னிரவு, பறவைகள் பூமியில் இறங்குவதற்கு முன், குளிர்மையானவேளையில் கண்ணகி அம்மனை மனங்குளிரவைக்கும் சடங்கினைச் செய்வர். மதுரையை எரித்த கண்ணகியின் மார்பிலே வெண்ணெய், தயிர் ஆகியன பூசி மனங்குளிரும்படி செய்வதே திருக்குளிர்த்தியாகும்.

- வளரும்...



# இவ்வார ராசிபலன்

**03-03-2023 வெள்ளி தொடக்கம் 09-03-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** மனதில் மகிழ்ச்சி பெருகும் வாரம். தனவரவு பெருகும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். நினைத்த காரியம் நடக்கும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். நினைத்த தொழில் அமையும். மற்றவர்கள் ஆலோசனை தவிர்க்கவும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். சோதனைகள் நீங்கும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது. பொறுமையை கையாள வேண்டும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிரயாணம் ஏற்படும். பிணிகள் அகலும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசுவழி ஆதாயம் உண்டு. மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோசம் பெருகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விரும்பிய பொருள் சேரும். வாழ்வில் வளம் கூடும். முடிவுகள் சாதகமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**ரிஷபம்:** பெற்றோர்களால் பாராட்டு பெறும் வாரம். வெகுமதி கூடும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. மனநிம்மதி தரும். பணவரவு தாமதமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய தொழில் அமையும். இனிய தகவல் வந்து சேரும். நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். எளிமையை விரும்புவீர்கள். வேலை பளு அதிகரிக்கும். புகழ் கூடும். எதிர்பார்ப்புக்கள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். தோல்விகள் விலகும். தொல்லைகள் அகலும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. தொழிலில் போட்டிகள் மறையும். மனை வாங்கும் யோகம் உண்டு. ஸ்தல பயணம் ஏற்படும். மன உற்சாகம் கூடும். உடல் உபாதை தோன்றி மறையும். ஆயுள்விருத்தி அதிகரிக்கும். அன்பினால் எதையும் வெல்வீர். விருந்தினர் வருகை உண்டு. மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை. வீண் பழி அகலும். வாய்பேச்சில் நிதானம் தேவை. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். சேய் நலம் கூடும். சண்டைகள் முற்றிலும் அகன்று விடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வான் தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,P




**மிதுனம்:** உதவிகள் கிடைக்கும் வாரம். குதூகலம் அதிகமாகும். குழப்பங்கள் அகன்று போகும். செலவுகள் குறையும். இனிய செய்தியால் மனம் மகிழும். செல்வாக்கு உயரும். புகழும், பொருளும் பெருகும். கனவு தொல்லை உண்டு. கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். பூர்வீகச் சொத்து சேரும். பழிச்சொல்லில் இருந்து விடுபடுவீர்கள். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். திருப்தி ஏற்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமைக் கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். வாழ்வில் முன்னேற்ற நிலையை அடைவீர். திருமண முடிவுகள் நல்லதாக அமையும். எதிர்மறை எண்ணம் உருவாகும். நினைத்த காரியங்கள் கைகூடும். மனதில் சஞ்சலம் ஏற்படும். வாகனத்தில் கவனம் தேவை. தொழிலில் லாபம் உண்டு. கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய ஆத்மாக்கள் வாழ வேண்டி வரும். சமுதாய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். மனதில் உள்ள பயம் நீங்கிவிடும். வாய்ப்புகள் தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,5,3
அதிர்ஷ்ட நிறம்: அரக்குநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K




**கடகம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். காரிய வெற்றி உண்டு. பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்கள் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் உடல்நலம் கூடும். மாங்கல்ய நமஸ்காரம் மனோதைரியம் கொடுக்கும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர்மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லைத் தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் கூடும். பெற்றோரின் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணம் விலகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 1,3,9,5
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G




**சிம்மம்:** புண்ணிய ஸ்தலம் செல்லும் வாய்ப்பு உருவாகும் வாரம். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். நட்டம் இல்லாத நன்மை ஏற்படும். பட்டம் பதவி வந்து சேரும். எதார்த்தமாக செயல்படுவீர்கள். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. தொழில் முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். எதிர்ப்புகள் குறையும். விரயங்கள் அதிகமாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,F



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
**'ராஜயோகம்'**
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**கன்னி:** மங்கையர் சிலர்க்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். எள் தானம் ஏற்றம் தரும். உள்ளம் மகிழும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். சுபச்செய்தி வரும். கன்னிப் பெண்களுக்கு திருமணத் தகவல் வரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பிரார்த்தனையால் பலன் உண்டு. நலம் விளையும் வாரமாகும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீரங்கநாதர், அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,P




**துலாம்:** பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும் வாரம். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தோற்றப்பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். மனக்கட்டுப்பாடு அவசியம். மனைவியால் சச்சரவு ஏற்படும். அரசு வாய்ப்பு தடைப்படும். செயல்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புகள் கூடி வரும். மனஅமைதி குறையும். பொருளாதார நிலை உயரும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பருப்பு தானம் பாவம் போக்கும். வாழ்த்துச் செய்திகள் வரும். காதலர்கள் தம்பதியாவார்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். கலையில் ஆர்வம் ஏற்படும். குடும்பத்தினரின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,E




**விருச்சிகம்:** தடைகள் விலகும் வாரம். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்பத்தில் அமைதி நிலவும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். மனநிறைவு உண்டு. தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவர்களுக்கு சாதகமான காலம். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வீண் பேச்சுக்கள் தவிர்ப்பது நல்லது. சொத்துக்கள் சேரும். தன லாபம் பெருகும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில், கவனம் தேவை. ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். ஆபரணச் சேர்க்கையுண்டு. பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். மதிநுட்பம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டுக்கள் கிட்டும். சாதனை புரியும் நாளாக அமையும். சொத்து சேர்க்கையுண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,7,3
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,M




**தனுசு:** தொழில் ஒப்பந்தம் குவியும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வெகுமதி கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஊக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மங்கள செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. சாதகமான வாய்ப்பு உருவாகும். இல்லத்தில் ஆனந்தம் குடிக்கொள்ளும். எதிரிகள் விலகி செல்வார்கள். ஏற்றம் தரும் நாளாக அமையும். பிள்ளைகளால் பெருமை சேரும். பயணத்தால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. குடும்ப கௌரவம் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: காப்பரக்ஷாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**மகரம்:** இன்னல்கள் அகலும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும் கடன் சுமை குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. எதிலும் கவனம் தேவை. உணவுபிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். திறமைகள் அதிகமாகும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். மனையின் அன்பு அதிகரிக்கும். மற்றவர் தொல்லை குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். உஷ்ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். துன்பங்கள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுபடுவீர்கள். கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் கூடும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதி தரும். வசந்தம் தேடி வரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பச்சையம்மன். அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C

(தொடர்ச்சி 26 பக்கம்)

# அன்பின் தொனி - 682

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

**உதவித் தற்கொலை -** Assissted suicide

சென்றசில ஆண்டுகளாக புதிதாக அறிமுகப்படுத்தி உலகில் பலபாகங்களிலும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள மற்று மொருசெயற்பாடாக "உதவித் தற்கொலை" (Assisted suicide) விளங்குகிறது. மருத்துவசிகிச்சையினால் குணப்படுத்த முடி யாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒருவர், தொடர்ந்து அவர் ஜீவன் அவரைவிட்டுப் போகும்வரை சரீரவேதனையிலும், மனத் துயரத்திலும் வாழ்வதைவிட மரிப்பதே தனக்குநல மென்று கருதி, தன் உயிரைமாய்த்துக் கொள்ள தற்கொலை செய்யத் தீர்மானித்து, அதைத் தானாகவே செயற்படுத்த முடியாத நிலையில், ஒருவைத்தியரையோ, உறவினரையோ, அல்லது நண்பரையோ நாடிதன் சுய விருப்பப்படி தற்கொலைக்கு அவர்கள் உதவியைப் பெற்றுதன் உயிரைமாய்த்துக் கொள்கிறார். அவருடைய தற்கொலைக்கு ஆதரவாக உதவிசெய்பவர்கள் தாங்கள் ஒருநல்லகாரியத்தை அவருடைய வேத னையிலிருந்து விடுவிக்க செய்துவிட்டோமென்று, இந்தஉதவித் தற்கொலையையும் நியாயப்படுத்தி அதை நடைமுறைப் படுத்தியும் வருகிறார்கள்.

இன்று பலதேசங்களில் "உதவிக் கொலையை" சட்டபூர்வமாக நடைமுறையில் கொண்டுவர சிலபொது ஸ்தாபனங்களும், பொதுமக்களும் முயற்சியெடுத்து வருவதோடு, சிலதேசங்களில் வெற்றியும் கண்டுள்ளனர். கொலைசெய்வதும், தற்கொலைக்கு உதவிசெய்வதும் கொலைதான். தற்கொலையைக் குறித்து பரிசுத்த வேதாகமம் கூறுவதை கவனிப்போம்.

தன் சகோதரனைப் பகைக்கிறஎவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான், மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராதுஎன்று அறிவீர்கள். அவர் தம்முடைய ஜீவனைநமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். **- 1 யோவான் 3: 15-16**

கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக, குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலை செய்யாயாக, நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன். **- யாத்திராகமம் 23: 7**

ஏற்கனவே வேதாகமத்திலிருந்து குறிப்பிட்ட பகுதியை இவ்விடத்திலும் நினைவுபடுத்தி கீழ்காணும் தேவவார்த்தைகளை தரவிரும்புகிறேன்:

கோலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத் தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். **- மத்தேயு 5: 21**

ஒருவர் தன்னுடைய உயிரை தானேமாய்த்துக்கொள்வது தனக்கு இருக்கும் சுதந்திரம் என்று சொல்லமுடியாது, அப்படித் தன் உயிரை எந்தவொரு நிலமையிலும் மாய்த்துக்கொள்பவர் தற்கொலை செய்கிறார், அது ஒரு பாவச் செயல். அது போலவே ஒருவர் சரீர வேதனைப்படுகிறாரே என்று இரங்கி அவர் மரிப்பதற்கு உதவி செய்வதும் கொலைதான். இரக்கக் கொலை இரக்கமில்லாத கொலை என்று வித்தியாசப்படுத்தி நியாயப்படுத்த முடியாது. கோலை கொலைதான், அதை "இரக்கம்", "அனுதாபம்", "அன்பு" இதுபோன்ற உருக்கானவார்த்தைகளை முன்வைத்து "கொலையை" மூடி மறைக்க முடியாது.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறு வான். **- நீதி.மொழிகள் 28: 13**

**அண்மைக்கால தவறான போதனைகளும் வழிமுறைகளும்.**

அண்மைக் காலங்களில் அறிமுகப்படுத்தி பலதேசங்களில் செயலப்பட்டு வருகிற தவறான வழி முறைகளையும் நடத்தை களையும் மேலே பார்த்தோம். அவற்றில் சிலவற்றை அநேக கிறஸ்தவர்களும் கிறிஸ்த்தவ தேசங்களாகக் கருதிப்படுகிற நாடுகளும் ஆதரிப்பதுடன் அவற்றை சட்டபூர்வமாக்கி செயற்படுத்தியும் வருகின்றனர். கிறஸ்தவர்களும் இப்படிப்பட்ட பாவ மான, பொல்லாப்பான செயல்களுக்கும் பங்காளிகளாக செயற்படுவதற்கு காரணம் என்னவென்று பார்க்கவேண்டியதாய் இருக்கிறது.

**சத்தியத்திற்கு முரணான போதனைகளும் வழிபாடும்**

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்ட சத்தியத்தினபடி செயற்படாமல் சிலகிறிஸ்தவ ஆலயங்கள் பரம்பரைபரம்பரையாக தேவகட்டளைக்குப் புறம்பாய் தமது சுயமான போதனைகளுக்கு அமைய சிறு குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பது ஒரு பாரம்பரியமாகிவிட்டது. இந்தவளக்கம் வேதத்திற்குப் புறம்பானதும், மாறானதும் என்பதை சத்திய வேதம் சரிவர கற்பிக்கிறது. குழந்தைகளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் தமது சொந்தவிருப்பத்தோடும் விளக்கத் தோடும் தமது பாவங்களுக்காக மனம் வருந்தி, மனஸ்தாபப்பட்டு, மனந்திரும்பி இயேசுவை தமது மீட்பராகவும் இரடச்சக ராகவும் ஏற்றுக்கொள்ளாமல், சிறுவயது முதல் ஒருகிறிஸ்தவ சூழநிலையில் மட்டும் வளர்க்கப்படுகிறார்கள் என்பது உண்மை. ஆனால், இரட்சிப்பைக் குறித்து சத்தியவேதம் கூறுகிறதாவது:

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரைஅனுப்பினார். அவரைவிசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான், விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராத படியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டா யிற்று. **- யோவான் 3: 16-18**

தொடரும்...



# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** முன்னேற்றம் தரும் வாரம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மையுண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. எண்ணங்கள் கைகூடும். பொதுப்பிரச்சனைகளில் தலையிடுவது தவிர்க்கவும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவர். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. பொறுமையை கையாள வேண்டும். மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்மந்தமான நோய் வந்து நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: செல்லாண்டியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,2,3,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,P




**மீனம்:** வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். இடமாற்றம் ஏற்படும். அன்பு அதிகரிக்கும். பழைய கடன் அடையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். ஆசைகள் நிறைவேறும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். பெரியோர்களின் வாழ்த்துக்கள் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேலை வாய்ப்புக் கூடும். பிரார்த்தனைகள் பலன் கொடுக்கும். வியாபாரம் செழிக்கும். மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 4,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,A

# தாய்மொழி காப்போம்

உலகில் உயர்மொழி நம்தமிழ் மொழியே
உவகையாய்ப் பேசுவோம் அம்மொழியை
இலக்கண இலக்கிய இயற்தமிழ் இசைத்தமிழ்
எல்லாம் அமைந்தது எம்மொழியே!
ஐம்பெரும் காப்பியம் அளித்த அரும்மொழி
அவ்வையின் ஆத்திசூடி அமைந்தமொழி
எம்மொழிக்கு ஈடிணை இல்லை எங்கும்
ஏற்றமுறச் செய்வோம் இவ்வுலகிலே!

அன்னைத் தமிழே அழகாய்த் தாலாட்டும்
ஆயுள்வரை நம்மைச் சீராட்டும்
இன்பம் தந்திடும் இனிய மொழியாம்
எல்லோரும் பருகும் தேனடையாம்
கரும்பிலும் இனிய கனிமொழி எம்மொழி
காலங்கள் ஆயிரம் பலகண்டது
இரும்பையும் எலும்பையும் உருக்க வல்லது
இதயத்தை இதமாய் மாற்றுமே!

பாட்டிசைத்த புலவர் பல்லாயிரம் என்றால்
பாக்களைப் படித்தவர் பலகோடி
நாட்டுப் பாடலும் நம்தமிழில் உண்டே!
நாடுபோற்றும் திருக்குறளும் நம்மொழியே!
காவிய நாயகி கண்ணகி கதையையும்
காதலியைக் கைவிட்ட காதலனையும்
காவியமாய் ஆக்கித் தந்த கவின்தமிழை
காலம் எல்லாம் போற்றுவோமே!

உள்ளத்தை ஊடறுத்துச் செல்லும் திருவருட்பா
ஊனையும் உருக்கும் திருவாசகம்
வள்ளலார் வழங்கிய வாழ்க்கை உபதேசம்
வாகாய் வரிசையாய் நிக்குதே!
எம்மதமும் சாரா பொதுமொழியாம் எம்மொழியை
இணையத்திலும் ஏற்றினோம் ஏற்றமுற
எம்வீட்டுக் கணினியும் கவிபாடும் எம்மொழியில்
இனியெங்கும் வீசுமே தமிழ்வாசமே!

முதலில் தோன்றிய மூத்த மொழியிது
முக்கனிச் சுவைமிகு மூலமொழி
இதயமே இளகும் ஈடில்லா மொழியின்
இலக்கணம் இயம்புமே தொல்காப்பியம்
பாரதி காட்டிய புதுமைப் பெண்ணை
பாடலாய்ப் பாடிக் காட்டுவோம்
பாரதப் போரின் பாடல்கள் பாடியே
பாரெலாம் தமிழை வளர்ப்போமே!

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453




May 12th & 13th, 2023

Singers | Dancers | Actors | Models | Entertainers

Registration Deadline:
5pm EST, May 1st, 2023

www.MarkhamTalent.ca

Renowned judging panel with Producers, Casting Directors, Talent Agents, Music Producers, Dean of AMPD York University

உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது

**வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்!**



**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள். இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் | - 30,000. |
| இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 25,000. |
| மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 20,000. |
| நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 15,000. |
| ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 10,000. |
| 10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா | - 5,000. |

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிகோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விபரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல் : kurufanclub@gmail.com இணையம் : kurunovelstory.blogspot.com

<https://canadiantamilsliterature.blogspot.com/>

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிர்க்குழுக்களிலும்; (whatsapp) பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

**சுலோச்சனா அருண்,**
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.


Women Empowered Social Club
Women Empowered Social Club
Presents
INTERNATIONAL
Women's Day
CELEBRATION
" EMBRACE EQUITY"
MARCH 11TH, 2023 | TIME: 5.30 PM
Motivational Speaker
Manjula Selvarajh
Journalist, Host &
National Columnist
Keynote Speaker
Santhia
Actor / Lawyer / Motivational &
Pattimandram Speaker /
Special Speaker
@ Lions & Rotary Clubs
EMCEE
Sylvia Francis
VENUE: J&J SWAGAT CONVENTION CENTRE
415 HOOD ROAD MARKHAM, ON
FOR MORE INFORMATION CONTACT:
KAVITHA | CHRISTEEN - (DUSHY)
416.618.3651
info@womenempsc.com
$60
Our mission is to empower women
and support their physical and
emotional health & wellness.

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N. UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1404 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 3, 2023


# சென்னையில் நடைபெற்ற சர்வதேச ஊடகவியலாளர் சிவராமகிருஸ்ணன் பரமேஸ்வரன் அவர்களின் "சஸ்டியப்த பூர்த்தி விழா



முன்னாள் பிபிசி செய்திச் சேவையின் தமிழ்ப் பிரிவின் சர்வதேச மற்றும் இலங்கை விவகாரங்களுக்கான செய்தியாளரும் தற்போதைய கனடா உதயன் சர்வதேச ஊடக இணைப்பாளரும் உலகெங்கும் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் விமர்சகர்களினால் நன்கு அறியப்பெற்றவருமான சிவராமகிருஸ்ணன் பரமேஸ்வரன் அவர்களின் "சஸ்டியப்த பூர்த்தி விழா கடந்த 25-02-2023 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. உற்றார் உறவினர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த நண்பர்கள் பிரமுகர்கள் என பலர் கலந்து சிறப்பித்த இந்த விழாவில் கனடா உதயன் சார்பிலும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பெற்றன.

ஊடகவியலாளர் சிவராமகிருஸ்ணன் பரமேஸ்வரன் . அவரது துணைவியார் மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் கனடா உதயன் ஆசிரிய பீடத்தின் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி.

# ஜெனிவா ஐக்கிய நாடுகள் சபையில் பகவான் நித்யானந்த பரமசிவம் அவர்களின் "கைலாசம்" தேசத்தின் பிரதிநிதிகள்



கடந்த 22-02-223 அன்று பதன்கிழமை ஜெனிவா மாநகரில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மாமன்றம் ஒன்றில் பகவான் நித்யானந்த பரமசிவம் அவர்களின் கைலாச தேசத்தின் பெண்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டும் மற்றும் உலகில் குறிப்பாக இந்தியாவில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகள் தொடர்பாகவும் உரையாற்றினர்.

ஐக்கிய நாடுகள் சபையில் முதன்முதலாக பரமசிவன் மற்றும் பராசக்தியின் தெய்வங்களுக்கு வழிபாடு செய்தனர். பின்னர் மாநாட்டு மண்டபம். பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கான குழுவின் 84 வது அமர்வைத் தொடங்குவதற்கு முன் கைலாசா பெண்கள் பகவான் நித்யானந்த பரமசிவம் அவர்களின் அவர்களின் ஆசிகளைப் பெற்றனர். இந்நிகழ்வில் கைலாச தேசத்தை பிரதிநிதித்துவம் செய்த பிரதிநிதிகள் குழுவில் ஐநாவுக்கான கைலாசாவின் நிரந்தர தூதர் விஜயபிரியா நித்யானந்தா, கைலாசா லாஸ் ஏஞ்சல்ஸ் தலைவர் மா முக்திகா ஆனந்தா, கைலாசா செயின்ட் லூயிஸ் தலைவர் மா சோனா காமத், மா நித்யா ஆத்மநாயகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். KAILASA UK இன் தலைவர் மற்றும் KAILASA பிரான்சின் தலைவர் மா நித்யா வெங்கடேசானந்தா மற்றும் கைலாசா ஸ்லோவேனி-யின் தலைவர் மா பிரியபிரேமா நித்யானந்தா. ஆகியோர் அங்கு கலந்து கொண்ட முக்கிய பிரதிநிதிகள் ஆவார்கள்.இந்த எழுச்சி மிகு நிகழ்வு பகவான் நித்யானந்த பரமசிவம் அவர்களின் பக்தர்களையும் சீடர்களையும் பரவசத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# ரொறன்ரோ பல்கலைக் கழக பட்டதாரி மாணவி ஒருவரை உதயன் பத்திரிகையில் பயில்நிலை பத்திரிகையாளராக இணைத்துக் கொள்ள அனுமதி



கனடாவில் இயங்கிவரும் பல்லினப் பத்திரிகையாளர்கள் அமைப்புக்களில் அதிக அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பு கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகம் ஆகும். இந்த கழகத்தின் மூலம் கனடாவி-ல் உள்ள பல்லினப் பத்திரிகை வெளியீட்டு நிறுவனங்கள் பல்கலைக் கழகங்களில் பத்திரிகைத்துறையில் பட்டப் பயிற்சி நெறிகளில் கற்றுவரும் பட்டதாரி மாணவர்களை குறிப்பிட்ட சில மாதங்களுக்கு பயில்நிலை பத்திரிகையாளர்களாக பணிக்கு அமர்த்திக் கொள்ள கனடிய அரசாங்கத்தின் மரபுரிமை அமைச்சு நிதி வழங்கி வருகின்றது.

இந்த திட்டத்தின் கீழ், ரொறன்ரோ பல்கலைக் கழக பத்திரிகைத்துறை பட்டதாரி மாணவி ஒருவரை கனடா உதயன் பத்திரிகையில் பயில்நிலை பத்திரிகையாளராக இணைத்துக் கொள்ள அனுமதி வழங்கியுள்ள கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகம் அதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இங்கே காணப்படும் படத்தில் கடந்த புதன்கிழமை மாலை ரொறன்ரோ மாந-கரசபை வளாகத்தில் அமைந்துள்ள கனடிய பல்லினப் பத்திரிகையாளர்கள் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மற்றும் கழகத்தின் தலைவர் தோமஸ் சாரஸ் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் கைலாகு கொடுப்பதை காணலாம்

# விநாயகர் விமர்சனம்: வில்லாதி வில்லன்களும் விழுந்த வரலாறு உண்டு

**(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத் தொடர்: பகுதி 6)**

**கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



அரசியலிற்கும் சினிமாவிற்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்பது யதார்த்தம்.
இரண்டிலும் கதாநாயகர்கள், வில்லன்கள், அடிதடிகள், கொலை கொள்ளை, வன்செயல்கள், பலாத்காரம், அடிதடி, பித்தலாட்டம் என அந்த தொடர்பு பட்டியல் நீளும்.
இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இது எந்த கதா-நாயகரின் படமாக இருந்தாலும் பொருந்தும்.
இந்த இலக்கணம் அரசியல்(வியா) வாதிகளிற்கும் பொருந்தும். அவர்களும் ஒரு வகையில் வில்லன்கள் தானே?

இலங்கையில் இப்போது நாள்தோறும் அரங்கேற்றப்பட்டுவரும் அரசியல் நாடகங்கள் தமிழ் சினிமாவை மிஞ்சும் அளவுக்கு ரசிகர்களை கதிரைக-ளின் நுனிப்பகுதியில் உட்கார வைத்திருக்கின்றன. அடுத்தடுத்து வில்லன் என்ன செய்யப்போகிறான் என்று பார்வையாளர்கள் பயங்கரக்கோபத்தோடு பார்த்துக் கொண்டிருக்க, வில்லனும் வில்லனின் சகாக்களும் செய்யும் அட்டூழியங்கள் அளவுகடந்து போய்க்கொண்டிருக்கும் நிலையில் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் நீதிகேட்டு வீதியில் இறங்க வில்லன் கூட்டம் தனது அடியாட்களைவிட்டு எதிரானவர்களை அடித்து துவம்சம் செய்வார்கள். (உள்ளே 9ம் பக்கத்தில் தொடர்ச்சி)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136